உ

வாழ்க உலகெலாம்

# ஞானசம்பந்தம்

[ தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு ]

மலர் 19 } சார்வரி - ஆடி 10—8—60 { இதழ் 9

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

# சிவ ஞான போதம்

[கட்டுரை 19]

( மலர் 19, இதழ் 8, பக்கம் 417 இன் தொடர்பு )

## சூத்திரம் 2. அதிகாரணம் 3.

1 'போக்குவரவு புரிய' (சூத்திரப்பகுதி).

2 'தோற்றமும் ஈறும்உள்ளதற்கு அல்லது உளதாதல் இன்மையான் இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவரும் என்றது'.

( இம் மேற்கோள் வாக்கியம் அதன் வார்த்திகப் பொழிப்புரை ).

3 'உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்' (சூர்ணிக் கோத்துரை).

4 (அ) 'கண்ட நனவைக் கனவுணர்விற் ருன்மறந்து
விண்படர்ந் தத்தூடு வினையினுற்—கண்செவிகேட்
டுள்ளதே தோற்ற வுளம்அணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழும்கருவில் தான்'.

(ஆ) 'அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வரும்அப் பண்பும்—பரவிற்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டம் என்ப
தடாதுள்ளம் போமா றது'.

(சிவ ஞான போத வெண்பா)

5 'அலகிலா வுயிர்கள்..................அமர்ந்து செல்ல' (சித்தியார்).

## மேற்கோள் விளக்கம்

வினு :- புனருற்பவம் (மீண்டும் படைத்தல்) சடப் பொருள்களுக்கு அல்லாமல் சித்துப் பொருளுக்கும் உள தாமோ? உளதாயின் அன்ருே முற்செய்வினையே இம்மைக்கு வரும் என முன்னர்க் கூறியது பொருந்தும்? அஃது உளதோ? இலதோ? (இஃது ஐயவினு;) கிரீடாப்பிரமவாதி கள் இவ்வையப்பாட்டின்கண் கூறுங்கடா இது :-

குடம் உடைந்தால், அக்குடத்தளவு நின்ற ஆகாயம் விண்ணென வரும் பெரிய காயத்தோடு கூடும். அவ் வாறே உடம்பு நீங்கினுல் அவ்வுடம்பில் நின்ற உயிர் பிரமத் தோடு கூடும். இது சுருதிவாக்கியம். இச்சுருதிபற்றி, இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை என்பது பொருந்தும்.

இங்கு மேற்கோள் வாக்கியத்தையும், கிரீடாப்பிரம வாதிகள் வாக்கியத்தையும் ஒருங்குநோக்கி உணர்தல் வேண்டும்.

' றந்த உயிர் மீளப் பிறப்பதில்லை' என்ற கிரீடாப் பிரமவாதிகள் கூறுங்கடாவை ஆசங்கைபண்ணி 'இவ் வான்மாக்கள் மாறிப் பிறந்துவரும்' என்றது மேற்கோள்

வாக்கியம். இவ்விரு வாக்கியமும் ஒன்றற்கு ஒன்று மறுதலை யாதல் அறிக. 'வரும்' என்றதில் உள்ள வருதற்றொழில் தோன்றுதோட்டு அவ்வாறு ஆதலைக் குறிக்கும். இது பலரும் அறியும் உண்மை. 'மாறி' என்றதில் உள்ள மாறுதற்றொழில் இங்கு 'இறத்தல்' என்றதாம். 'போக்கு வரவு புரிய' என்னும் சூத்திரப் பகுதியாலும் ஏதுவோடும் உதாரணத்தோடும் உள்ளதாகிய இயைபாலும் இறத்தல் என்றதே பொருள் ஆதலை உணர்க. இதை உணராமல் அச்சு வேறுபடுதல் என்று உரைப்பாரும் உளர். அஃது இவ்விடத்திற்குச் சிறிதும் இயையாது. (இது சிற்றுரைக் கருத்து) இது சூர்ணிக் கருத்துரையுள், 'உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்' என்றுள்ள வாக்கியத்திற்கும் மறுப்பாகும்.

## ஏதுவின் விளக்கம்

ஏது :- தோற்றமும் ஈறும் உள்ளதற்கு அல்லது உள தாதல் இன்மையான். (இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவரும் என்றது).

வினா :- இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவரும் என்ற தற்குப் பிரமாணம் என்ன ?

விடை :- தோற்றமும் (- உற்பத்தியும்) ஈறும் (- நாசமும்) உள்ளதற்(கு - தொடர்ச்சியாயுள்ள பொருட்)கு அல்லாமல் ஏனைய பொருட்கு உற்பத்தி கூடுமோ ? கூடாது. கூடாமையால், இனி இவ்வான்மாக்களே மாறிப் பிறந்து வரும் என மேற்கொண்டது.

வினா :- 'தொடர்ச்சியாய்' என்றது எவ்வாறு கிடைத் தது ?

விடை :- 'தோற்றமும் ஈறும்' என்றவற்றின் உம்மை களை எதிரது தழீஇய உம்மைகளாகக் கொள்ளுமாற்றாற் கிடைத்தது. (பின்னரும் அவை உளவாக்கோடல்)

வினு :- ‘ உளதாதல் ’ என்ருல் என்ன ?

விடை :- அதற்கு இங்கே ‘தோன்றுதல்’ என்று பொருள்.

வினு :- வேறுபொருளும் இதற்குக்கூறல் அமையுமோ?

விடை :- சிவாத்துவிதிகளும் சாங்கியமும் கூறுங் கடாவை ஆசங்கித்து வேறு பொருளும் கூறலாம்.

வினு :- சிவாத்துவிதிகள் கூறுங் கடா என்ன ?

விடை :- குடகாய வுவமையேபற்றி இருவினையால் வரும் புனருற்பவம் (மீண்டும் படைத்தல்) உயிரின் பொருட்டுச் சிவத்துக்கேயாம் என்பது இங்கு அவர்கள் கூறுங்கடா.

வினு :- சாங்கியர் கூறுங் கடா என்ன ?

விடை:- மூலப்பிரகிருதியில் தோன்றும் புத்திதத்துவத் திற்கே அப் புனருற்பவம் என்பது சாங்கியர் கூறுங் கடா.

வினு :- அவ்விருவர் கடாவையும் ஆசங்கித்து மேற் கோடல் நுதலிற்று இம்மூன்ருவது அதிகரணம் என்று கொண்டு, கூறும் வேறு பொருள் யாது ?

விடை :- ‘தோற்றமும் ஈறும் அவ்வுரிமை உள்ளதற்கே அன்றி ஏனையவற்றிற்கு ‘ உளதாதல் இல்லாமையால் இவ் வான்மாக்களே மாறிப் பிறந்து வரும் என மேற்கொண்டது என்று உரைப்பினும் அமையும்’ (இது வேறு பொருள் ஆகும்).

வினு :- இவ்விரு பொருட்கும் வேறுபாடு என்ன ?

விடை :- முதலாவதில் ‘ உற்பத்தியும் நாசமும் தொடர்ச்சியாயுள்ள பொருட்கு ’ என்றதும் இரண்டாவதில்

உற்பத்தியும் நாசமும் அவ்வுரிமையுள்ள பொருட்கு' என்றதும் வேறுபாடு ஆகும். ஆயினும் 'உரிமை' என்று அவாய் நிலையால் வந்த சொல்லால் வேறுபாடுற்றதன்று.

வினு :- பின் எதனுல் அவ்வேறுபாடு ?

விடை :- மாறிப் பிறந்துவருதற்குப் பிரமாணம் என்ன என்றதற்கு விடை கூறியது முதற்பொருள். 'சிவத்திற்கே' என்றும் 'புத்திதத்துவத்திற்கே' என்றும் முறையே கூறிய சிவாத்துவிதிகட்கும் சாங்கியர்க்கும் மறுப்பாக உரிமையுள்ள உயிர்க்கே என்றது இரண்டாவது பொருள், இதனுல் வேறு பொருள் பட்டவாறு அறிக.

வினு :- 'தோற்றமும் ஈறும்' என்றது பன்மை. 'உளது' என்றது ஒருமை. தோற்றமும் ஈறும் உளவாதல் என்னுது, உளதாதல் என்றது குற்றம் அன்ருே ?

விடை :- தோற்றம் உளதாதல் ஈறு உளதாதல் எனத் தனித்தனி சென்று இயையும் ஆதலின் குற்றம் அன்று.

வினு :- ஆன்மாக்களே என்று இருப்பின் பொருந்துமே?

விடை :- அதுதான் பொருத்தம். அப்பிரிநிலையேகாரம் குன்றல் என்னும் திரிபுற்றது.

வினு :- இனி மாயாவாதி முதலியார் மதத்தை மறுத்தற் பொருட்டு மேற்கொண்டது என்பது இயையாதோ ?

விடை :- 'அத்துவிதம்' என்ற சொல்லாலே அவரை மறுத்து ஆன்மாக்களைப் பெறுவித்தது. அதனுல் இங்கு அவர் மதம்பற்றிக் கடா நிகழ்தற்கு ஓர் இயைபு இல்லை.

குறிப்பு :- அடுத்த கட்டுரையில் இங்குத் தலைப்பில் உள்ள இரண்டு வெண்பாக்களுக்கும் பொருள் எழுதப்படும்.

(தொடரும்)

# திருக்கயிலாய யாத்திரை : :
# : : முதலாண்டு நிறைவு விழா

திருக்கயிலாய பரம்பரையின் உண்மைப் பொருளை விளக்கி மகாகயிலாய யாத்திரையை முடித்தருளிய நம் கயிலைக் குருமணியவர்களின் பெருங்கருணை அளவிடும் தரத்ததன்று. தம்முடன் நல்லடியாரையும் உடன்கொண்டு அப்பேரின்பத்தை நுகருமாறு செய்தருளிய நாள் இந்த ஆடி அமாவாசையோடு சனிக்கிழமை (23—7—60) ஓராண்டு நிறைகிறது. சென்ற ஆண்டில் இதே நன்னாளில் திருக்கயிலாயத்தைத் தரிசனம் செய்தார்களாதலின் இத்திருநாளை உயரியமுறையில் தருமை யாதீன மடாலயத்தில் நினைவு கூர்ந்து போற்றவேண்டும் என்பது அருளற்பாடு. ஆதலின் ஆடி அமாவாசை யாகிய அத்திரு நாளில், ஆதீன மடாலயத்தில் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூஜை மடத்தில், குருஞானசம்பந்தப் பெருமான் அருள் வரலாற்று ஓவியங்கள் திகழும் மேல் தாழ்வாரத்தில் திருக் கயிலாயத் திருவுருவப் படம் அழகுற விளங்கிய இருக்கை யில் எழுந்தருள்விக்கப்பெற்றது. காலை 8 மணிக்கேல்லாம் கயிலைக் குருமணியவர்கள் தம் திருக்கரத்தால் பூஜைகள் நிகழ்த்தினார்கள். மெய்யடியார் பலரும் கூடியிருந்து கண்டு பயன் கொண்டார்கள். ஆதீன தேவஸ்தானங்களைச் சேர்ந்த ஓதுவாமூர்த்திகள் கயிலைப் பதிகங்களைக் காலை முதல் பாரா யணம் செய்தபடி இருந்தார்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்களும் திருக்கயிலாயத் திருவுருவப் படத்தின் முன் கூடியிருந்து கயிலைப் பதிகங்களைப் பாராயணம் செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எல்லா மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கயிலைப் பதிகங்கள் அடங்கிய மகாகயிலாய யாத்திரை, நூலை வழங்கியருளினார்கள். பகல் 12 மணிக்கு மாகேசுவர பூஜை. பல்கலைக் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, துவக்கப்பள்ளி ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் அறுவகைச் சுவை உணவு வழங்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வந்து கவனித்துப் 'பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து' உண்பித்தருளினார்கள். மாலை 5 மணி முதல் விரிவுரை நிகழ்ச்சிகள் திருநேறிய தெய்வத் தமிழ் மன்றத்தில்

நிகழ்ந்தன. திருக்கயிலாய யாத்திரை விழாச் சொற்பொழிவுகளா தலின் அப்பர், காரைக்காலம்மையார், கழறிற்றறிவார், நற்கீரர், சம்பந்தர், சுந்தரர் ஔவையார் ஆகிய கயிலைகண்ட சான்றோர் திருவடிப் பொருளே பொருளாய் அமைந்தன.

இரவு 8 மணிக்குமேல் வெள்ளியிரதம் மின் விளக்கு களாலும், பூக்களாலும் நன்கு அணி செய்யப்பட்டிருந்தது. பூஜை மடத்தில் திருக்கயிலைத் திருவுருவப் படத்திற்கு வழிபாடுகளை முடித்த பிறகு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வந்திருந்த அடியவர்களுக்கெல்லாம் நைவேத்ய மகாப்ரசாதம் பொதிந்த பைகளும், கயிலைப் பதிக வெளியீடுகளும் வழங்கியருளினார்கள். உடன் அன்பர் பலர் புடைசூழக் கயிலைக் குருமணியவர்கள் அரகர முழக்கத்தோடு திருவுருவப் படத்தைக் கொண்டுவந்து வடக்கு முகப்பில் நிறுத்தப்பட்டிருந்த இரதத்தில் எழுந்தருள் வித்தார்கள். நாதசுரம் முழங்கிற்று. ஆதீனத் தொடர்புடைய மாயூரம், காட்டுமன்னார்குடி, சிதம்பரம் முதலிய ஊர்களைச் சார்ந்த பெருஞ்செல்வர்களாகிய பெருமக்கள் பலரும் ஆதீனப் பணியாளர் பலரும் இரத வடத்தை இழுக்கத் தொடங்கினர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் உடன் நடந்துவந்தருளி னார்கள். கயிலைப் பதிகப் பாராயணத்துடன் திருக்கயிலைத் திருவுருவப்படத் திருவீதியுலா சிறப்புற நிகழ்ந்தது. 'மழை, சிறு தூறலாக இட்டுத் திருக் கயிலைத் திருஇரதத்தைப் புனித நீராட்டிக்கொண்டிருந்தது. வீதியில் மக்கள் நைவேத்யம் வைத்து வழிபட்டுத் திருக்கயிலையைக் கண்ணாரக் கண்டு களிப் புற்றனர். திருக்கயிலைத் திருவுருவத்தையும், அக்கயிலை சென்ற கயிலைக் குருமணிகளையும் கண்டு களிகொண்டு தருமைத் திருவூர் மக்கள் மகிழ்ந்தது போலவே, அவ் இரதத்தை இழுத்துச் சிவ புண்ணியம் எய்தினர் பெருமக்கள் பலரும். 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று ஒவ்வொருவர் உள்ளமும் உருக்கமாகத் தனக்குள் பாடிக்கொண்டது. தருமை யாதீன வரலாற்றில் திருக்கயிலாய பரம்பரையினைக் கண் கூடாகத் தெளிவு படுத்திய 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் பெருங்கருணையால் மகாகயிலாய யாத்திரை முதலாண்டு நிறைவு விழா இவ்வாறு சிறப்புற நடைபெற்றது. அப்பரடிகள் திருக்கயிலை கண்டருளிய திருநாளும் இதுவே என்பது எண்ணி மகிழ்தற்குரிய ஒன்று.

# ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்குப் :
# புஷ்பாஞ்சலியும் இலட்சார்ச்சனையும்

தருமையாதீனத்தில் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்தின் வட மேற்கு மூலையில் எழுந்தருளி உலகிற்கு அருள் விளக்கம் புரிந்துவரும் அஷ்டாதசபுஜ ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு அவ்வப்போது தருமையாதீன 25 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் புரிந்துவரும் இலட்சார்ச்சனைகளும் சிறப்பு வழி பாடுகளும் பல. இவ்வாரம் ஆடி வெள்ளிக்கிழமை (29—7—60) யன்று கயிலைக் குருமணியவர்கள் நிகழ்த்திய வழிபாட்டில் பெருஞ்சிறப்பு இருந்தது. என்னவென்றால் ஸ்ரீ துர்க்கா தேவிக்குப் புஷ்பாஞ்சலி செய்து கயிலைக் குருமணியவர்கள் வழிபட்டதாகும். அண்மையில் கன்னியாகுமரியில் கன்யா குமரிக்கும் புஷ்பாஞ்சலி செய்து இன்புற்று, அக் கவி னுடைக் காட்சியைக் கருத்தகத்துக் கொண்ட நம் கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் மிக்க பொருட்செலவில் இச்சிறப்பு வழிபாட்டைச் செய்வித்தருளியது பெரிதும் போற்றத் தகுந்தது.

ஆடி வெள்ளிக்கிழமை வேறு அத்திருநாளின் மாட்சியை அதிகமாக்கிற்று. காலை முதலே ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும், ஆதீனத் தேவார பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அபிராமி அந்தாதியை மன முருகப் பாராயணம் செய்துகொண்டிருந்தார்கள். அன்பர் திரள்திரளாக வந்து வழிபட்ட வண்ணமிருந்தனர். இரவு 8 மணிக்குத் துர்க்காதேவி திருமுன் கயிலைக் குருமணி யவர்கள் புஷ்பாஞ்சலியைத் தொடங்கியருளினார்கள். வண்ண வண்ண மலர்கள் கூடை கூடையாகக் கொண்டுவரப்பட்டன. அர்ச்சகர்கள் அம்பிகையின் திருமுடியில் பயபக்தியோடு அவற்றைத் தம் இருகரங்களாலும் சொரிந்து வழிபட்ட வண்ணமேயிருந்தனர். 'பூத்தவளே புவனம் பதினான்கையும்' என்று அபிராமி பட்டரால் பாடப்பெற்ற பராசக்தி அல்லவோ அம்பிகை! எல்லா உலகங்களையும் பூத்த அவ்வன்னைக்குப் பூக்கைக்கொண்டு போற்றி செய்வது பொருத்தமன்றோ?

அம்பிகை திருமுன் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தது. கண் மலர்கள் மலர அனைவரும் இவ்வியத்தகு காட்சியை நோக்கிப் புஷ்பாஞ்சலி புரிந்தார்கள். ஒரு புறம் வடமொழிக் கீதாஞ்சலியும், தென்மொழி அஞ்சலியும் நடைபெற்றவண்ணமிருந்தன.

இறைவன் திருவுளத்தில் அழகொழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமும் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியுமாகிய அம்பிகை புன்னகை பூத்து அருட் காட்சி வழங்கிப் புஷ்பாஞ்சாலியை ஏற்றுக்கொண்டு அருள் மழை பொழிந்தாள். மகா கயிலாய யாத்திரையின்போது கயிலைக் குருமணியவர்கட்கு உள்ளும் புறம்பும் துணை நின்ற ஒளி விளக்காகிய அம்மையின் தண்ணருளை அனைவரும் பெற்று உய்தற்குப் பெருந்துணையாயின இந்த ஏகதின இலட்சார்ச்சனையும், புஷ்பாஞ்சலியும் இவற்றை நிகழ்த்துவித்த கயிலைக் குருமணியின் திருவடிகளை வாழ்த்தி வணங்கி உய்தலே அன்பர் உலகத்தின் கடமை என்று சொல்லவும் வேண்டுமோ?

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

On my way to Annamalai University I had an opportunity of seeing this beautiful temple. It is kept very clean, the temple ritual is fasinating and soul inspiring.

(Sd.) M. S. RANDHAWA,
Vice President,
Indian Council of Agricultural Research,
New Delhi.

(Sd.) C. R. SESHADRI,
Joint Director of Agriculture, Madras.

(Sd.) R. BALASUBRAMANIAM,
Agl. Metheorologist & Reception Officer,
20—1—'60.

# சீவக சிந்தாமணியில் உள்ள ரசங்கள்

பன்மொழிப் புலவர்,
**திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்**
( ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப்புலவர், சென்னைப் பல்கலைக் கழகம் )

(மலர் 19 இதழ் 8 பக்கம் 421 இன் தொடர்ச்சி)

## ஹாஸ்ய ரஸம்

இனி, ஹாஸ்ய ரஸத்தை நோக்குவோம். ஹாஸ்யரஸத்திற்குத் தேயம், காலம், வயசு, வர்ணம் இவற்றின் மாறுபாடு உள்ளவர் ஆலம்பன விபாவம்; கேசபந்தனம் அஸத்பாஷணம் பொய்ப்பேச்சு ப்ரலாபம் நர்த்தனம் பிறர்நடை முதலியவற்றின் அனுகாரம் (பொருநுதல்) இவை முதலியன உத்தீபனவிபாவம். நாசி, உதடு, கன்னம் இவை அசைத்தல், கண் மூடுதல், முகஞ் சிவத்தல், ஒரு பக்கமாகத் திரும்புதல், பக்கத்திலிருக்கும் பொருளை அல்லது மருங்கைப் பிடித்துக்கொள்ளுதல் முதலியன அனுபாவம். வியர்வை, கண்ணீர், குரல் வேறுபாடு முதலியன ஸாத்விகபாவம். நித்திரை, அவஹித்தம், த்ரவம், ஆலஸ்யம் ஸஞ்சாரிபாவம். இவற்றால் ஹாஸம் என்னும் ஸ்தாயிபாவம் சுவைக்கப்பட்டு ஹாஸ்யரஸம் ஆகும்.

இலக்கணையாரின் மணத்தில் திரிபன்றி எய்வது இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தது. மூன்று பன்றியின் உருவங்கள் மேலே திரிந்துகொண்டிருக்கும். அதனை வைத்திருந்த சக்கரமும் தரைமேல் சுழன்று வரும். சுழலும் அச்சக்கரத்தின் மேல் ஏறி நின்று மேலே சுழலும் பன்றியை எய்தல் வேண்டும். இலக்கணையின் மணங்கருதி வந்த அரசர் ஒவ்வொருவரும் சென்று எய்வாராயினர். அவருள்,

> 'வார்மதுத் துளிக்கு மாலை மணிமுடித் தொடுத்து நாலக்
> கார்மதங் கடந்த வண்கைக் காம்பிலிக் காவன் மன்னன்
> ஏர்மதக் கேழ லெய்வான் ஏறலும் பொறியி னேறுண்
> டார்மதக் களிற்று வேந்தர்க் கருநகை யாக வீழ்ந்தான்.'

காம்பிலியரசன் விசையோடு சக்கரத்தே ஏறினவளவில் அதன் விசையினால் ஏறுண்டு (அடிபட்டு) கீழே வீழ்ந்தான். அதனைக் கண்டு ஆங்குக் குழுமியிருந்த அரசர் நகைத்தனர்.

'ஊடிய மடந்தை போல உறுசிலை வாங்க வாரா
தாடேழு வனைய திண்டோ ளவந்தியன் அதனை நோனுன்
நாடேழுந் தார்ப்ப மற்றந் நன்சிலை முறித்திட் டம்பை
வாடினன் பிடித்து நின்ருன் மணமகன் போல நின்ருன்.'

அவந்தியரசன், தனது வில் வளைக்க வாராததனுல் அதனை முறித்துவிட்டு அம்பினை மட்டும் பிடித்துக்கொண்டிருந்தான்: அதனுல் அங்கிருந்த பல நாட்டவரும் ஒலிபடச் சிரித்தனர். செய்யுளில் 'ஆர்ப்ப' என்றது எள்ளி நகைத்த சிரிப்பின் ஆரவாரமாகும்.

'எரிகதிர்ப் பைம்பொற் சுண்ண மிலங்கமேய் முழுது மப்பப்
புரிகழ லணிந்த நோன்ருட் போதன புரத்து வேந்தன்
அரிதினிற் றிகிரி யேறித் திரிந்துகண் சுழன்று சோர்ந்து
விரிகதிர்க் கடவுள் போல வேறுநிலத் தோலிப்ப வீழ்ந்தான்.'

இச்செய்யுளிற் கூறப்பட்டுள்ள அரசன் செயலும் ஹாஸ்யத்துக்குக் காரணமாதல் அறிக.

இனி, சீவகன் பன்றியை எய்வான் சென்று பொறியின் அருகில் நின்று, திரிகின்ற அப்பன்றிகள் மூன்றும் ஒருங்கு சேருங்காலத்து அவை அற்று விழும்படி நேரத்தை நோக்கிக் கொண்டிருக்கையில், (முன்னர்த் தோற்று ஆங்கு இருக்கும் அரசர்கள்.)

'பொறியின்மே லேற றேற்ருன் நாணினுற் போதல் செல்லான்
நெறியின்வில் லூன்றி நிற்ப நிழன்மணிப் பன்றி யற்று
மறியுமோ என்று முன்னே மணிமுடி சிதறி வீழ்ந்த
செறிகழன் மன்னர் நக்குத் தீயத்தீ விளைத்துக் கொண்டார்'

என்ற செய்யுளில் உள்ள ஹாஸ்யம் சீவகன் கோபத்திற்குக் காரணமாதலின் அங்கமாயிற்று; அங்கியாகியதின்று. இவ்வாறே பிறவுங் காண்க.

## அங்காங்கியம்

இனி, விசையை வரலாற்றுள் ஒரு பகுதியை நோக்குவோம்: கட்டியங்காரன் அரசன்மேற் படையெடுத்து வருதலை யறிந்த விசயை துன்பமடைய, அரசன் தேளிவுரை கூறி அவளை

மயிற்பொறியிலேற்றி விடுத்தான். அவள் நகர்ப்புறத்துச் செல்லுங்கால் வெற்றி முரசின் ஒலியைக்கேட்டு அரசன் இறந்து பட்டதை யுளங்கொண்டு மெய்மறந்து சோர்ந்தாள். மயிற்பொறி மெல்ல மெல்ல நன்காட்டில் வீழ்ந்தது. ஆங்குத் தமியளாகிய தேவி மகப்பயந்தாள். பயந்தவள் மகப்பேற்று நோவிலளாயி னமையின் தானே குழந்தைக்குப் பாலூட்டி, அதற்குத் திலக மிட்டு, அக்குழந்தையின் அழகினை நோக்கினாள். கணவனை யிழந்த துயரமும், சுடுகாட்டில் மகப்பெற நேர்ந்த நிலைமையும் அவளை வருத்தலாயின.

அப்பொழுது அவள் புலம்பி யரற்றினவை கன்னெஞ்சினை யுங் கரைக்கத்தக்கன. 'வெவ்வா யோரி முழவாக' 'பற்று மன்ன னகர்ப்புறமால்' என்னுஞ் செய்யுட்களை நோக்குக.

ஆண்மகப்பயந்ததனால் உண்டாகும் உவகை, விசையை யின் உள்ளத்தில் உவகையாய் இடம்பெறவில்லை; அது துயரம் மிகுவிப்பதாயிற்று.

'அரும்பொற் பூணும் ஆரமு மிமைப்பக் கணிகள் அகன்கோயில்
ஒருங்குகூடிச் சாதகஞ்செய் தோகை யரசர்க் குடன் போக்கிக்
கருங்கைக் களிறுங் கம்பலமுங் காசுங் கவிகள் கொள வீசி
விரும்பப் பிறப்பாய் வினைசெய்தேன் காண விஃதோ பிறக்குமா'

என்றதுகாண்க. கணவன் இறந்ததை யறிந்ததால் விசையைக்கு உண்டாயசோகம் நிலைபெற்றுக்கருணரசம் ஆயிற்று. ஆதலின் அப்பொழுது ஆண்மகப்பிறந்ததனால் உண்டாகும் உவகை அம்மகவின்பாலுள்ள வாஞ்சை இவை நிலைபெறலாவன அல்ல. அக்கருணரசத்தை மிகுவிக்கும் உறுப்பாயின.

சிலர் பக்தியை ஒரு ரஸமாகக்கொண்டு, ரஸம் பத்து என்றனர். சிலர் புத்ர வாத்சல்யத்தையும் ரஸமாகச் சேர்த்துப் பதினொன்றெனக் கொண்டனர். ஆயின், பக்தி வாத்ஸல்யம் இவை காதலின் (அன்பின்) வகையா யடங்குமாகலின் சுவை ஒன்பஃது என்பதே நூற்றுணிபு. ஆகலின், ஈண்டுப் புத்ர வாஞ்சை ரஸமாகாது; பாவமே ஆகும். அது கருண ரஸத்தை வளர்ப்பதாயிற்று.

இனி, சீவகன் அறவுரைகேட்டுத் துறவுளங்கொண்டு அதனைத் தேவியர்க்கு அறிவிப்ப, அவர் அவன் துறவினைக் கருதி அழுது வருந்தினர். அப்பொழுது தம்பால் அவன் நிகழ்த்திய காதற்செயல்களை எண்ணி இயம்பிப் புலம்பினர்.

'அருந்தவி சாகி எம்மைச் சுமந்தயா வுயிர்த்த வான்மைப்
பெருந்தகு குரங்கு காள்நீர் பெண்ணுயி ரளிய தாமே
வருந்துமா லென்று நோக்கீர் வாடுமால் ஆவி யென்னீர்
விருந்தினர் போல நின்றீர் வேற்றுடல் காண்மி னென்பார்.'

இச்செய்யுள் முதலாகவுள்ள எட்டுச் செய்யுட்களிலும், தம்மைக் காதலித்துக் காதற்செயல் புரிந்த உறுப்புக்களை நோக்கி உரைத்தனர். பின்னர், காந்தருவதத்தை முதலிய எண்மர் தேவியரிடத்தும் சீவகனிகழ்த்திய காதற்செயலைத் தனித்தனியே எடுத்துரைத்துப் புலம்பினர்.

'கோல்வே னெடுங்கட் குணமாலை குஞ்சரத்தால்
அல்லனே யுற்றுழுக் கன்று களிறடர்த்துப்
புல்லிப் புணர்முலையின் பூங்குவட்டின் மேலுறைந்தாய்
எல்லேமற் றெம்பெருமாற் கின்றிவளும் இன்னளோ!'

'தாழ்ந்துலவி மென்முலைமேற் றண்ணாரம் வில்லிலங்கப்
போழ்ந்தகன்ற கண்ணினாய் ஏப்பெற்றுப் போகலாய்
தாழ்ந்தமர ரின்னமிர்தம் தக்கநாட் டாகாதே
வீழ்ந்ததேன வீழ்ந்தாய்நீ இன்றதுவும் விட்டாயோ!'

'செங்கச் சிளமுலையார் திண்கரையூர் பல்லினர்
மங்கையர்கள் காப்ப மகிழ்ந்தாளை நீமகிழ்ந்து
பங்கயமே போல்வாளைப் பார்ப்பானாய்ப் பண்ணணைத்துத்
தங்கினாய் கோவே துறத்தல் தகவாமோ!'

இத்தொடக்கத்துச் செய்யுட்களைக் காண்க. இக் காட்டிய செய்யுட்களில் குணமாலை, கேமசரி, சுரமஞ்சரி இவர் திறத்தால் சீவகன் செலுத்திய காதன்மை கூறப்பட்டுளது. இவ்வாறே ஏனைத் தேவியர்பாற் காதலித்த திறனும் இப்பகுதியிற் காணலாம்.

இதில், முன்னர் நிகழ்ந்த காதற்செயல்கள் நினைக்கப்பட்டன. இவ்வாறு நிகழ்ந்தவற்றைக் கூறுதலும் ரஸமாகும்.

'நிகழ்ந்தது கூறி நிலையலுந்திணையே' என்று ஆசிரியர் தோல் காப்பியனுருங் கூறியிருப்பது காண்க. ஆயின், ஈண்டுக் கூறப்பட்ட காதற் சேயல்கள் சிருங்கார ரஸத்திற்குரியன வாயினும், சிருங்கார ரஸத்தைத் தோன்றுவிப்பன அல்ல; நிர்வேதம் என்னும் பாவத்தை வளர்ப்பனவாயுள்ளன. நிர்வேத மாவது — சுவாவமான ரூபம் என்பர். அஃதாவது தனது அவமானம் — இழிவு கருதியது. கணவன், யாக்கையின் இழிவும் எடுத்துக்கூறி இவரைத் துறக்கலாயினமையின் இவருள்ளத்தில் நிர்வேதபாவம் உண்டாயிற்று. பின்னர் அவன் துறவின்மேற் சேல்லவே இவருந் துறவு பூண்டனர்; காட்டிற் சேன்று தீக்ஷை பேற்றுத் தவம் புரிந்தனர். ஆகலின் அந் நிர்வேதம் நிலைபேற்று ஸாந்த ரஸமாயிற்று.

இவற்ருல், சீவகன் றுறவினைக் கருதி அழுத தேவியர் கூறிய சிருங்காரரஸச் சேயல்களேல்லாம் நிர்வேதபாவத்தை வளர்த்தனவே என்பதும் சிருங்காரரஸ மாயிற்றில என்பதும் தேளிவாகும். ஈண்டு ரஸம் ஒரு பாவத்தை வளர்ப்பதாயிற்று என்பது உட்கோளற்பாலது.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**
**Velur Sri Vaithianathaswami Devasthanam,**
**Vaithiswarankoil.**

It was an unforgettable experience, standing in the Divine Presence, feeling with the heavenly uplifting feeling and realising the influence of the Great Ones. Being a Tuesday there was added grace about the entire atmosphere. How I wish it were possible to have this rich blessings more frequently. May the Great Ones shine on us all.

(Sd.) S. R. KRISHNAMOORTHI,
Director of Postal Services, Madras.
8-3-60.

# 'கொக்கிறகு'

முதுபெரும்புலவர்
**திரு. முத்து. சு. மாணிக்கவாசகனர் அவர்கள்**
பிரின்ஸிபால், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

திருவாசகத்திலே திருத்தெள்ளேணத்தின் முடிவில்,

" குலம்பாடிக் கொக்கிறகும் பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ "

என்னுந் திருப்பாடலிற்குறித்த 'கொக்கிறகு' என்பதற்கு இத் தருமையாதீன வெளியீட்டில், 'கொக்கு வடிவமான அசுரனைக் கொன்று இறைவன் சூடிய இறகு' என்று குறிப்புரை காணப்படுகின்றது. இதனை நோக்கிய அன்பர் ஒருவர் கங்கைகொண்ட சோளேச்சுரத்தில் என்னுடன் உரையாடிக் கொண்டிருந்த போழ்து, இது புகழ்மெய்பெற்ற திரு. கா. சு. பிள்ளையின் உரையைப் பார்த்தெழுதிய பொருந்தாவுரை என்றார். அதை விளக்கிச் சொல்லவேண்டுமென்று கேட்டேன் நான். அதனால் அவர் 'கொக்கிறகு என்றது கொக்கினது இறகு அன்று; இச் சோணாட்டில் கொக்கு மந்தாரை' என்னும் பூவைக் குறித்து வழங்குவது; அவ் வழக்கம் இன்றும் உண்டு என்றார். எனக்கு அப்போது ஒரு நடுக்கம் உண்டாயிற்று. ஏன்? திருமுறையின் குறிப்புரையுள், கொக்குருவம் உள்ள அசுரனது இறகு என்று எழுதிவிட்டேனே என்று உள்ளம் உலைந்தது. அதனை அவர்க்குச் சொல்லாமல் மலர் என்னும் பொருள் கொள்வது நன்று என்று மட்டும் இசைந்து நின்றேன். அது குறித்து மறுநாள் நினைந்து, அதன் உண்மையைத் துணிந்து, இதனை எழுதலானேன். இது பலர்க்கு அதன் பொருளைத் துணியுமாறு செய்ய உதவும் என்பது என் எண்ணம். நாலாந்திருமுறைக்கு எழுதிய குறிப்புரையுள்,

" பக்கமே பாரிடங்கள் சூழப் படுதலையில்
புக்கவூர்ப் பிச்சையேற் றுண்டு பொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின் றூவல் கொடியெடுத்த கோவணத்தோடு
அக்கணிந்த அம்மானை நான்கண்ட தாரூரே." (188)

என்றதில் உள்ளதற்குக், 'கொக்கு' என்னும் பொருளையே குறிக்கொண்டுரைத்தேன். அது தவறு அன்று என்று துணிந் தேன். அந்த அன்பர் சொல்லியபொருளும் அன்றி இப்பொருளும் அதற்கு உரியதே என்பதைத் தக்க ஆதாரங்களுடன் தெளிந் தேன். அவர் கொண்ட கொக்கு மந்தாரையைக் குறியாத இடங் களும் உள. கொக்குருக்கொண்ட அசுரன் வரலாறும் உளது.

திருநாவுக்கரசு நாயனார் அருளியவற்றுள்,

" கொக்கிறகு சென்னியுடையான் கண்டாய் "

" கொக்கிறகர் குளிர்மதிச் சென்னியார் "

" கொக்கின்றூவலும் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலைமாலை விரிசடை நக்கன் "

என்னும் இடங்களிலும் பிரண்டும் கொக்குமந்தாரையைக் கொண்டும் பொருந்தக் கூறலாம். திருவதிகையிற் பாடி யருளிய சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என முதலுந் திருப்பதிகத்தின்

" பூண்டதோர் கேழ லெயிலும் பொன்திகழ் ஆமைபுரள
நீண்டதிண் டோள்வலம் சூழ்ந்து நிலாக்கதிர்போல வெண்ணூலும்
காண்டகு புள்ளின் சிறகும் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதுமில்லை "

என்ற இரண்டாவது திருப்பாடலில், புள்ளின்சிறகைக் கண்டு அஞ்சுவது யாதொன்றும் இல்லையே! இதில் உள்ள 'கட்டங்கம்' என்றதன் பொருளும் இடைப்பிறவரலாக ஈண்டுரைத்தல் நன்று. திருக்கோவையாருரையிலே (பா. 242) 'கட்டங்கம்' என்றதற்கு 'கட்டங்கம் என்னும் படைக்கலத்தையும்' என்றும் 'கடங்கம் என்பது மழு. இது கட்டங்கம் என நின்றது' என்றுமுரைத்தவா றறிக. இத்தேவாரம் 'கட்டங்கக் கொடியும்' உண்டெனக் கூறிற்று.

'புள்ளின் சிறகு' என்று சொல்வேந்தர் அருளிய உண்மை யால் 'கொக்கிறகு' மந்தாரை மலரையே உணர்த்தாது கொக்கினது இறகையும் உணர்த்தும் எனல் இனிதுபுலப்படும்.

மகாகயிலாய யாத்திரை முதலாண்டு நிறைவு விழாவில்



திருக்கயிலாயத் திருவுருவப் படத் திருவீதியுலா

(கச்சியப்பசிவாசாரியர்) கந்தபுராணத்தில் ஒரு பாடலும், இக்கருத்தை விளக்குகிறது.

" ஏங்கி அமரர் இரிந்தோட வேதுரந்த
ஓங்கு குரண்டத் துருக்கொண்ட தானவனைத்
தீங்கு பெறத்தடிந்து சின்னமா ஓர் சிறையை
வாங்கி அணிந்த அருள் இங்கென்பால் வைத்திலையே"

என்னும் (மகேந்திரகாண்டம் - சயந்தன்புலம்புறு படலம் 64) பாடலில், கொக்கிறகு சூடிய வரலாறு சுருக்கிக் கூறப்பட்டுளது. குரண்டத்து உரு - கொக்கின் உருவம்; தானவன் - அசுரன்; கடிந்து - கொன்று; சின்னம் - அடையாளம்; சிறை - இறகு. இதனையே 'புள்ளின் சிறகு' என்றார் வாக்கின் மன்னவனார். இவ்வரலாறு உபதேசகாண்டத்திலும் நன்குணரக்கிடக்கின்றது.

" குழலார் சடையார் கொக்கினிறகர் கோலநிறமத்தம்
தழலார் மேனித் தவளநீற்றர் சரிகோவணக்கீளர்
எழிலார் நாகம் புலியின் உடைமேல் இசைத்து விடையேறிக்
கழலார் சிலம்பு புலம்பவருவார் சித்தீச்சரத்தாரே"

(திருஞானசம்பந்தர்)

என்பதுபோலும் இடங்களில் எவ்வாறு கொள்ளினும் பொருந்தலாம். பகாசுரவத வரலாற்றைக் குறித்த மூலத்தை ஆராயின் அறிஞர் வியப்பர். அவ்வரலாற்றுக்குறிப்புடைய இங்கு மந்தாரைக்குவந்தாரைக்காணோம் என்பது வெள்ளிடைமலையாம். ஆதலின், 'கொக்கிறகு' என்பதற்குத் திருவாசகத்துக் குறிப்புரையுட்கண்ட பொருளிற் குற்றம் இல்லை என்பதும் சிவபுராணக் கொள்கையைத் தழுவிய சம்பிரதாய வழக்குரை என்பதும் நன்கு விளங்கும். 'புள்ளின் சிறகு' என்றதால் இது குற்றம் இல்லாததே என்பது யாவரும் அறிதற்பாலதொன்று.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil

Satisfied with everything

A. S. Barn I. C. S.
Steel Controler.

# மெய்ஞ்ஞானச் செல்வர்கள்

திரு. சு. அ. இராமசாமிப்புலவர் அவர்கள்
கருப்பக்கிளர், தஞ்சை மாவட்டம்

( மலர் 19, இதழ் 8, பக்கம் 446 இன் தொடர்ச்சி )

## ந. சிவசங்கர தேவர்

அடிகளார் நவாபுவைப் பார்த்து, ''ஐயா! நாம் ஒன்றும் அறியோம். திருப்போரூர் முருகக் கடவுளுடைய திருக்கோயி லுக்குத் தருமச் செயலாளராக அமர்ந்துள்ளோம். அவ்வூர் எல்லைக்குள் எத்தகைய உயிர்க்கொலையும் நடக்கக்கூடாது என்று பெரியோர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். யாம் அதனை விழிப்புடனிருந்து கண்காணித்து வருகின்றோம். அவ்வாறுகக் கோவளம் நவாபபின் மருமகன் அவ்வூர்க்கு வந்து ஒரு கொலை செய்ய முயன்றான். யாம் அதனைத் தடுத்தோம். அவன் நவாப் பிடம் தெரிவிக்க நவாபு எம்மைச் சிறையிலடைத்து வருத்தத் தொடங்கினான். நாம் முருகக் கடவுள் திருவருளால் உயிர் பிழைத்து இவ்விடம் வந்து சேர்ந்தோம். நாம் இங்குவந்து சேர்ந்து ஆறு நாட்கள் ஆகின்றன. இவ்வளவு நாட்களாக அங்குப் பூசையும் இல்லை. எமக்கு உணவும் இல்லை. உம் முடைய மனைவிக்கு இந்நோய் கடவுளுடைய அருளால் உண் டாகியிருப்பதாகத் தெரிகிறது'' என்று சொன்னார்.

நவாபு அடிகளாரைப் பார்த்துப், ''பெரியீர்! தாங்கள் கூறுவது உண்மையாகவே தெரிகிறது. என் மனைவிக்கு இப் பொழுது நேரிட்டிருக்கும் துன்பத்தைத் தீர்த்துவிட்டால் தங்கட்கு வேண்டியவைகளையெல்லாந் தருகின்றேம்'' என்று கூறினான். அடிகளார் திருவுளம் இரங்கினார். ''ஆறுமுகந் துணை செய்யும்'' என்று கூறிச் சிறிது திருநீற்றையள்ளி நவாபின் கையிலே கொடுத்தருளினார். அவன் அதனைக்கொண்டு போய்த் தன் மனைவிக்களித்தான். அவள் அதனை உண்டு வயிற்றுவலி தீர்ந்து நல்ல உறக்கங் கொண்டாள். அடிகளார் நவாபபின் உடன்பாடு பெற்றுத் தாம் முன் தங்கியிருந்த மர நிழலுக்குச் சென்று தங்கியிருந்தார்.

அன்றிரவும் முருகக் கடவுள் முன்போல் நவாபின் மனைவியிடஞ் சென்று வேலாற் குத்தி மறைந்தருளினர். அவளுக்கு நோய் முன்னிலும் கடுமையாக உண்டாகி வருத்தத் தொடங்கியது. அவள் தன்னுடைய கணவனையழைத்து, "நீ அழைத்து வந்த பெரியவருக்கு நீவிர் யாதும் கொடுக்கவில்லைபோல் இருக்கிறது. மறுபடியும் முன்போல் கனவு கண்டு மிகுந்த துன்பப் படுகிறேன். அது முன்னையிலும் மிகுதியாக வருத்துகின்றது" என்று சொல்லிக் கதறினள்.

நவாபு மிகுந்த அச்சம் அடைந்தான். தன்னுடைய அமைச்சர் முதலியவர்களைக் கொண்டு அடிகளாரை அழைப்பித்தான். உயரிய இருக்கையில் அமர்த்தி வணங்கிப் போற்றினன். "தாங்கள் விரும்புகின்றவைகளையெல்லாம் இப்பொழுதே கொடுப்பதற்கு யாதொரு தடையும் இல்லை. தாங்கள் வேண்டியதைக் கேட்டருளுதல் வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டான். அடிகளார், "நம்மையாட்கொண்டருளும் திருப்போரூர் முருகப்பெருமானுடைய நாள் வழிபாடுகளும் சிறப்பு வழிபாடுகளாகிய திருவிழாக்களும் திருக்கோயிலிற் செய்யப் பெற வேண்டிய திருப்பணிகளும் எப்பொழுதுங் குறைவில்லாமல் நன்கு நடைபெறும்பொருட்டு இறையிலி நிலங்களாகச் சிற்றூர்களைத் தரவேண்டும். அவ்வாறு தருதற்கு உடன்படுவீராயின் ஆறுமுகக் துணைசெய்யும்" என்று கூறினர்.

அடிகளார் கூறியதற்கு நவாபு மகிழ்ச்சியடைந்தான். திருப்போரூர், தண்டலம் என்னும் இரண்டு ஊர்களையும் தானமாக வழங்கினன். உறுதி மொழியைச் செப்பேட்டில் வரைந்து கொடுத்தான். அடிகளார் முருகக்கடவுளை உள்ளத்தில் எண்ணித் திருநீறு வழங்கினர். அதனை நவாபின் மனைவி உட்கொண்டாள். அக்கொடுநோய் அப்பொழுதே அடியோடு நீங்கிவிட்டது.

மேலும் நவாபு மிகுந்த மகிழ்ச்சியடைந்து. அடிகளார்க்குச் சிவிகை கவிகை பட்டாடைகள், திருச்சின்னங்கள், சிவிகை சுமப்போர் கூலிக்கு உப்பளம் முதலியவைகளும் வழங்கினன். திருப்போரூர் தண்டலம் இரண்டு சிற்றூர்களிலும் நீதி உசாவல் புரிவதற்கும் அடிகளாருக்கு அதிகாரம் வழங்கினன். இச்செய்திகளையெல்லாம் கோவளத்தில் இருந்த குட்டி நவாபுக்கும் தெரியப்படுத்தினன். அடிகளார் ஆர்க்காட்டில்

சிவிகையிலேறி மிகுந்த சிறப்புடன் திருப்போரூரை யடைந்தார். செல்லும்போழுது முட்களால் தைப்புண்டு பேருந்துன்பத்துடன் உயிரைக் கையிற் பிடித்துக்கோண்டு சென்ற அடிகளார் திரும்பும்போது இவ்வாறு பேருஞ் சிறப்புடன் திரும்பினுர் எனின் மேய்ஞ்ஞானச் செல்வத்தின் மேன்மையை நாம் விரித்துரைக்கவும் வேண்டுமோ ? திருப்போரூரையடைந்த அடிகள் ஆதீனத்திற்கு வழக்கப்படியே எழுந்தருளினுர்.

முன்பு கோவள நவாபுவின் மனைவிக்கு ஏற்பட்ட வயிற்று வலி அந்நாள் வரையில் தீராமலே இருந்தது. ஆர்க்காட்டு நவாபுவிடம் இருந்துவந்த கட்டளையைக் கண்டு கோவளம் நவாபு மிகுந்த அச்சமடைந்தான். தன் மனைவிக்கு நேர்ந்துள்ள வயிற்றுநோய் கடவுள் அருளால் உண்டாகியிருக்கிறதேன்று உணர்ந்தான். உடனே புறப்பட்டுத் திருப்போருக்குச் சேன்ருன். தன்மனைவி கனவுகண்டு வயிற்று வலியால் துன்பப் படுவதைச் சோன்னுன். தனக்கு ஆர்க்காட்டு நவாபிடம் இருந்து வந்துள்ள கட்டளையைக் காட்டினுன். தன்னுடைய குற்றத்தைப் போறுத்துத் தன்னை மன்னிக்க வேண்டுமேன்று வேண்டிக்கோண்டான்.

பிறகு அடிகளாரைச் சிவிகையில் கோவளத்திற்கு அழைத்துக்கோண்டு சேன்ருன். தன் மனைவியின் வயிற்று வலியைப் போக்கி அருள் சேய்ய வேண்டு என்று வேண்டிக்கோண்டான். "திருக்கோவிலுக்குக் குடமுழுக்குச் சேய்தல் வேண்டும். அதனைச் சேய்து முடித்தற்கு வேண்டிய போருளுதவியை நீ புரிவாயானுல் ஆறுமுகம் துணை சேய்யும்" என்று சோன்னுர் அடிகள். நவாபு அதற்கு உடன்பட்டான். அடிகளார் "ஆறுமுகந் துணை சேய்யும்" என்று சோல்லித் திருநீறு வழங்கினுர். அதனையுண்ட அளவில் அவளுடைய வயிற்றுவலி நீங்கி விட்டது. அவள் மிகுந்த களிப்படைந்தாள். நவாபு தான் வாக்குக் கோடுத்தபடி குடமுழுக்குச் சேய்வதற்கு வேண்டிய போருள் உதவியைச் சேய்தான்.

அடிகளார் மேலும் பல ஆண்டுகள் போரூர் முருகன் திருப்பணிகளைச் சேய்துகோண்டிருந்து பிறகு வீடுபேற்றை யடைந்தார்.

---

திறன் ஆய்வு:

# தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 19. இதழ் 5. பக்கம் 282 இன் தொடர்ச்சி)

## எண் 10, தசமணிமாலை

இயற்றியவர்: நிரம்பஅழகிய தேசிகர். வெளியிட்டோர்: 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி சீகாழி வித்துவான் திரு. அ. ப. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. முதற் பதிப்பு 1930.

இந் நூலாசிரியராகிய நிரம்ப அழகிய தேசிகரின் பிறப்பிடம் வேதாரணியம். பரஞ்சோதி முனிவரோடு உடன் பயின்ற ஒருசாலை மாணவர் என்பர். இவர் எழுதிய நூல்கள் பல. சேது புராணம், திருப்பரங்குன்றப் புராணம், திருவையாற்றுப் புராணம் முதலிய நூல்கள் இவர் எழுதியன. சிவஞானசித்தியார் திருவருட் பயன் முதலிய நூல்களுக்கு உரை யெழுதியுள்ளார். இவர் கருநிறம் உடையராயும் நுணுக்காய்க் கிரந்தி உடையவராயுமிருந்ததைக் கண்டு நிரம்ப அழகாகத்தான் இருக்கிறார் என்று யாரோ ஒருவர் கூறிய ஏளன உரையே இவர் பெயராக வழங்குகிறது. இயற்பெயர் மறைந்துவிட்டது. காலம் நானூறு ஆண்டுகளுக்கு முன் என்பர்.

தசமணிமாலை: ஆதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்மேல் பாடப்பெற்ற தோத்திர நூல். 10 ஆசிரிய விருத்தங்களைக்கொண்டது. ஒவ்வொரு பாடலும் 'நாதாந்த குருவே, திகாந்த குருவே, கமலை ஞானசம்பந்த குருவே' என்ற மகுடத்தோடு முடிகிறது. குருமூர்த்திகளைச் சிவமாகக் கண்டு விளித்து முத்திநெறியளித்தருளும்படி வேண்டுகின்றார் ஆசிரியர். குருநாதரை விளிக்கும் ஒவ்வொரு

தோடரும் மிக அழகாக அமைந்துள்ளன. 'சம்பந்தன் மேற் சுந்தரன் வாகீசன் மாணிக்கவாசகன் பாடுபாடல் பயனடைய ஒரு வடிவேடுத்த குருவே' என்ற தோடர்போன்றவை படிக்கச் சுவைதருவன. யோகஞான நிலையை அருளவேண்டும் என்ற ஒன்பதாவது பாடல் போருளாழமுடையது

" அடியிணையேன் முடிவைத்த தலைநாளி லேபிரம
ரந்தரத் தோரேழுத் துண்டு
அதனதுஒலி அசபா நடத்தோலி அதைக்கேள்
அதிற்கோடி ரவிசோ திபார்
உடலோழுகும் அமுதருவி உண்டுண் டிருந்திருந்
துருகிதுவும் விந்து நாதத்து
உண்மைநா தாந்தமிதன் மேலினிதே னச்சோன்ன
ஒருசோ லேப்போது சோல்வாய் "

இந்நூலின் இறுதியில் குருஞானசம்பந்தர் தோத்திரமாகத் தனிப்பாடல் இரண்டு உள்ளன. அப்பாடல்களை இயற்றினார் பேயர் புலப்பட்டிலது

## எண் 11. ஞானசம்பந்தகுருராய அட்டகமும், சந்திரகலாமாலையும்

இயற்றியவர் :- தமிழாகரமுனிவர். வேளியிட்டோர் :- 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி சீகாழி வித்துவான், திரு. ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களால் வேளியிடப்பட்டது. முதற் பதிப்பு 1930.

தமிழாகர முனிவர் :- திருநேல்வேலியில் வேளாண் குலத்தில் தோன்றியவர். கல்வியறிவு நிரம்பப் பேற்றவர். சிதம்பரம் குகை மடத்து ஞானப்பிரகாசரிடத்தில் உபதேசம் பேற்றவர். நேல்லையில் ஒரு அறச்சாலை மடத்துத் தலைவராய் இருந்தார். திருநேல்வேலிக்கு ஆறுவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் யாத்திரையாக எழுந்தருளிய காலத்து அவர்களிடத்து ஞானோபதேசம் பேற்று ஆதீனத் திருக்கூட்டத்து அடியவராயினர். சோற்சுவை போருட்சுவைகளோடு கற்பனைத்திறன் தோன்றக் கவிபாடும் சமர்த்தர்.

பெருமைபெறு நாவலர்கள் கொண்டாட உலகினில் பெருங் காப்பியங்கள் செய்யும் சீர்கொண்ட தமிழாகரன்' என்ற பாராட்டுரை இவரது பெருமையை அறிவிக்கும். இவர்கள் இயற்றிய வேறு நூல்கள் நீதிசாரம், ஆசௌசதீபிகை, பிராயச்சித்த சமுச்சயம், நெல்லையப்பர் நான்மணிமாலை, நெல்லைகாவலர்மாலை, திருப்பணி மாலை, கலைமகள் இரட்டை மணி மாலை முதலியன.

குருராய அட்டகம்:- தம்மை யாட்கொண்ட குருநாதரைக் குருஞான சம்பந்தராக எண்ணித் தோத்திரிக்கும் எட்டுப் பாடல்களைக் கொண்டது. அட்டகம் - எட்டுப்பாடல்களின் தொகை. எழுவகைத் தீக்ஷையால் தம்மை நெல்லையில் ஆட்கொண்ட திறத்தை முதற்றிருப்பாடல் கூறுகிறது. 'திகழ்ஞானசம்பந்தனே கமலையதிபனே சிவசமய குருராயனே' என்று ஒவ்வொரு பாடலும் முடிகிறது. 2ஆம் பாடலில் தாம் நெல்லையில் இருந்தபோது இயற்றிய நூல்களை விரித்து ஓதுகின்றார். 'முத்திக்கொடி கட்டி யாள்கின்ற சற்குரவன்' என்றும் 'சேகமீதிலிம சேதுபரியந்த மிகஉள்ள தேசிகர் உனைப்போல் வரோ' என்றும் தம்மைக்

'கல்லாதபுல்லனைக் கும்பமுனி செந்தமிழ்க்
கடவுளே என்றும் என்றும்
காசொன்றும் உதவா உலுத்தனை மிகுகொடைக்
கற்பக மெனக் கழறியும்
பொல்லாத பொய்யனைப் புவிமீதில் வருதரும
புத்திர ரெனப் புகன்றும்
பொய்யே பிதற்றி யுதரத்தினை நிறைத்துவாழ்
புல்லர் போ லல்லன் யானே'

என்றும் கூறிக்கொள்கின்றார்.

சந்திரகலாமாலை: சந்திரகலை பதினாறு ஆதலின் அது போல 16 செய்யுட்கள்கொண்ட இந்நூலும் சந்திரகலாமாலை எனப் பெயர்பெற்றது. உலகியல் பந்தபாச விடுதலை கிடைக்கும் வழி வினவுகிறது முதற் பாடல்.

"புகலரிய ருத்ராக்ஷ தாரணு சர்வாங்க
பூதிஉத் தூள ளுதை
போதனர் செவிப்புலத் தூடமுத தாரையாய்ப்
புகுதவிடு பஞ்சா க்ஷரா
சகலகலை யுந்தேர்ந் தறிந்தடங் கியவிதய
சாதகர்க் குப்போ தகா"

என்று குருநாதரை விளிக்கின்றூர். 3 ஆம் திருப்பாடல் குமர குருபரர் வாக்குத் தடைப்பட்டதை உள்ளுறுத்திப் பேசுகிறது. குருநாதரின் சந்நிதானத்தில் நிற்கும் அறிஞர்களின் பட்டியல் தருகிறது 53 ஆம் பாடல். தருமைத் திருமடத்தில் நாயாய்க் கடைத்தலேயில் கிடக்கும் தகுதிபெற்றுல் முப்பத்துமுக்கோடி தேவர் பதமும் எனக்குத் துச்சம் என்று 13 ஆம் பாடலில் கூறுகிறூர். கிளி, குயில், பாம்பு, சகோரம், பூனே, எலி முதலியவற்றிற்கு அருள்செய்த திறம் பாராட்டப்படுகிறது. 16 ஆம் பாடல் தருமையாதீனக் குருபரம்பரையை விவரிக்கிறது.

"கைலாசர் திருவருட் பெறுநந்தி யவர்பதம்
　　காண்சனற் குமரர் தாளேக்
கண்டசத் தியஞான தரிசனி பரஞ்சோதி
　　காட்டு மெய்கண்ட தேவர்
கைலாரும் அருணந்தி மறைஞான சம்பந்தர்
　　கழல் பரவுமா பதியர்பின்
காணவரும் அருள்மச்சு செட்டியார் கங்கைமெய்
　　கண்டரோரு காற்பழு தையால்
சைலவர்களும் சோலும் சிற்றம்ப லவர்கழல்
　　சாருஞா னப் பிரகாசர்
தாங்கிவளர் கமலே ஞானப்பிரகா சப்பெரியர்
　　தாம்பரம் பரையில் வந்த
சைவகுரு ராசன்நீ"

(தொடரும்)

---


குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளே B.A., B.L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்

# திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

(மலர் 19, இதழ் 8, பக்கம் 442 இன் தொடர்ச்சி)

## 14—5—60 எட்டாவது திருநாள்

திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் B.A., L.T., (தலைவர், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.) மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றியதன் சுருக்கம் :-

சைவரனைவரும் சைவத்தை உணரவேண்டும். மனிதன் எண்ணுதற்குச் சக்தி படைத்தவன். கடவுள் வணக்கம் தேவை என்பதை அன்றே கண்டான். கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் கடவுளை வணங்குவதில் தவறுவதில்லை. அவர்களைப் போல சைவன் வழிபாட்டை முக்கியமாகக் கருதவேண்டும். இன்றைய விஞ்ஞானம் ஆக்க வழியில் செல்வதை விட்டு அழிவுப்பாதையில் அடிவைத்துள்ளது. விஞ்ஞானம் மனித இனத்தை அழிப்பதில் அதிக ஆற்றலைப் பெற்று வருகிறது.

உலகம் அணுக்களால் ஆனது என்பதைப் பழந்தமிழ் பேசியிருக்கிறது. "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய்" என்று கடவுள் தத்துவத்தை விஞ்ஞானத்தோடு கலந்து காட்டியுள்ள மணிவாசகப் பெருமானே "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" என்று போற்றியுள்ளார்.

கற்றல், கேட்டல், தெளிதல், சிந்தித்தல் என்ற முறையில் நிற்றலே வளர்தற்கு வழியாகும். இறைவனை அப்பர் "இரவும் பகலும் பிரியாது வணங்குவன்" என்றும், சம்பந்தர் "உள்ளம் கவர் கள்வன்" என்றும், சுந்தரர் "எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய்" என்றும், மணிவாசகர் "இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க" என்று முதலில் வாழ்த்து அருளிப் பின் நம் அருளாசிரியர்கள் தமக்கும் இறைவர்க்கும் உள்ள தொடர்பு கூறியருளியிருக்கிறார்கள். விஞ்ஞானம் இன்று மெய்ஞ்ஞானத்தைப் போற்றத் தொடங்கியுள்ளது.

செந்தமிழ்ச்செல்வீ. புலவர். திருமதி. ந. சி. குழந்தை யம்மாள் M. L. A. (தமிழ் விரிவுரையாளர், நிர்மலா கல்லூரி, கோயம்புத்தூர்) அவர்கள் சிவப்பிரகாசம் என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் :-

பதினான்கு சாத்திரங்களுள் ஒன்று சிவப்பிரகாசம். இது புறச்சமயத்தாருக்கு இருளாகவும், அகச்சமயத்தவருக்கு ஒளி யாகவும் விளங்குவது. இங்கு உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று என்ற திருவாசகம் காண்க. வேதாந்தத்தின் தெளிவு சித்தாந்தம் என்பதை "வேதாந்தமென்னும் உச்சியில் மலர்ந்த தேனை அருந்தினர் சிலரே" என்று குமரகுருபரர் கூறியது போல சமய நூல்களின் பயனை அடைந்தவர்கள் சிலரே. இறை வனது தன்மையைக் கூறும்போது செல்கதியாய்ச் சிறிதாய்ப் பெரிதாய்த் திகழ்வது சிவம் என்கிறார்கள். மேலும் அறிவானும் தானே அறிவிப்பானும் தானே என்ற காரைக்காலம்மையார் அநுபவ வாக்கை அறிதல் வேண்டும். "வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி" நிற்கின்றான் இறைவன் என்கிறார் மணிவாசகர். உயிருக்கும் ஆணவத்திற்கும் உள்ள தொடர்பு செம்பிற் களிம்புபோல் உள்ளது என்று விளக்கியுள்ளனர் சான்றோர். உயிர் பிறக்கும்போதே ஆணவத் தொடர்புடையதா யிருக்கிறது. உமாபதி சிவம் அருளிய இந்நூலில் கூறிய சிவ வழிபாட்டால் உயிரை நன்னிலையில் செலுத்தி உய்யலாம் என்பதை அறிகிறோம். இந்நூலில் 100 பாடல்கள் உள்ளன.

## 15—5—60 ஒன்பதாவது திருநாள்

மகாவித்துவான் திரு. K. ஆறுமுக நாவலர் அவர்கள் நாகர்கோயில் முப்பொருள் உண்மை என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

சைவ சமயத்தில் பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள் களும் பேசப்படுகின்றன. நமது திருக்கோவில்கள் கூட இறைவன் - பதி, நந்தி - பசு, பலிபீடம் - பாசம் என்ற முறை யில்தான் அமைந்துள்ளன. ஆயபதிதான் அருட்சிவ லிங்கம் என்றார் திருமூலர். அவ்விறைவனை அடைய நிலைத்த உள்ளம் பெறவேண்டும். ஒருமனப்பட்ட உறுதியான உள்ளம்படைத்தவர்

அப்பர். அப்பரைப் போல மன அமைதி பெற்றால்தான் உலகில் அமைதியாக வாழலாம். அதற்கு ஓடும் செம்பொன் னும் ஒக்கவே நோக்கும் நோக்கம் வேண்டும். அந்நோக்கம் திருநாவுக்கரசரிடம் இருந்தது. அதனால் தெள்ளியேனாகி நின்று தேடினேன் - கண்டேன் என்கிறார் அப்பர். அவரைப்போல அந்த முப்பொருள் உண்மையை உணர்ந்தால்தான் ஆண்டவன் அருள் கிடைக்கும்.

டாக்டர் திரு. T. M. P. மகாதேவன் M. A. Ptd., அவர்கள் (சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறைத் தலைவர்) வேதாந்தமும், சித்தாந்தமும் என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

முதலில் சங்கரர்தான் இந்து மதத்தைத் தோற்றுவித்து வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களைக் கூறினார். பின் சமய குரவர்கள் நால்வருள்பட அறுபத்துமூன்று நாயன்மார்களும் தோன்றி சமயப்பணி செய்தார்கள். தென்னாட்டுக் கோயில் களில் ஆண்டவனின் அடியார்கள் செய்த பணி மிகவும் அதிகம். அவனருள் நமக்குக் கிடைக்க பக்தி அவசியம். பக்தி ஒன்றையே நோக்கமாகக்கொண்டு வாழ்ந்து உய்திபெற வேண்டும்,

திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T.. அவர்கள் ' கல்வித்துறையில் கடவுள் நிலை ' என்ற தலைப் பில் பேசியதன் சுருக்கம் :-

கடவுள் வழிபாடு மிக அவசியம். இளமையில் கற்க. கசடறக் கற்க. என்பதே நம் முன்னோர் அருளாணை. உணர் வரிய மெய்ஞ்ஞானம் தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் என்ற சேக்கிழார் வாக்கை உணர்தல் வேண்டும். கடவுள் பற்றிய நூல்கள் கல்வித்துறையிற் பல இடம் பெறுதல் வேண்டும். அப்போதுதான் நிறைந்த புலமையுடன் அருள் உடைமை முதலியன கலந்து வாழ்வில் நிறைவுண்டாகும். தேவாரத் திருமுறைகள் முதலியன நம் கல்வித் தரத்திற் கலந்து விடுதல் வேண்டும். கற்றதனாலாயபயனை வள்ளுவர் வழிநின்று பெறுதலும், பெருக்குதலும் நம் கடமையாகும்.

## 16—5—60 பத்தாவது திருநாள்

வித்துவான் சிவநெறிச்செல்வர், திரு. K. M. வேங்கட ராமையா அவர்கள் M. A. B. O. L. (பிரின்ஸிபால் செந் தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.) மாசிலாமணி தேசிகர் மாண்பு என்ற பொருளில் பேசியதன் சுருக்கம் :-

மாசிலாமணி தேசிகர் தருமையாதீன நான்காவது அருட் குருவாக விளங்கியவர்கள். அவரிடம் உபதேசம் பெற்றவர்கள் குமரகுருபரர். அவர்கள் தம் குருமணியின் மீது "பண்டார மும்மணிக்கோவை" என்ற நூலை இயற்றி அவர்களுடைய மாண்புகளை எல்லாம் விளக்கியிருக்கிறார்கள்.

"விண்புரக்குஞ் சிந்தாமணி யென்கோ மெய்ச்சுடரால்
மண்புரக்குஞ் சூளா மணி யென்கோ — பண்பார்
திருமா முனிவர் சிகாமணி யென்கோ சீர்
தருமாசிலா மணியைத் தான்"

என்ற பாடல் அவர்களுடைய மாண்பைத் தெற்றென விளக்கும். மேலும் தமது குருமணியை விளித்துக் கூறும்போதெல்லாம் "நான்மறைக் கிழவ, நற்றவ முதல்வ, நூன் முறை பயின்ற நுண்மைசால் அறிஞ!" என்று பாராட்டுகிறார்கள். மாசிலா மணித் தேசிகர் எனப்பேசுவோர் முப்பாசமும் ஓடும் என்றும் குறிப்பிடுகிறார்.

திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் (சென்னை) 'சோக்கநாதக் கலித்துறை' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

குருஞான சம்பந்தர் ஸ்ரீவில்லிப்புத்தூரில் சுப்பிரமணியப் பிள்ளை - மீனாட்சியம்மையாகிய இவர்களுக்கு மகனாய் அவதரித் தார். மதுரையில் சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு சோக்க நாதனை வழிபடு கடவுளாகப் பெற்றுப் பூசை செய்ய விரும்பிக் குருவைப்பெற வேண்டினார். கமலை ஞானப்பிரகாசர் குருவாக அமைந்தார். இவரது அதிபக்குவ நிலைகண்டு தருமை செல்லப் பணித்தார்கள். இவர்தான் சோக்கநாதக் கலித்துறையின் ஆசிரியர். சோக்கநாதப் பெருமானைக் கலித்துறையிற் கலித் துறையாற் பாடி அருள்பெற்றார்கள். இவர்களே தருமை யாதீனத்தின் ஆதி பரமாசாரிய சுவாமிகள். இவர்களுடைய பரம்பரையே இப்பொழுது விளங்கிவருகிறது.

தருமையாதீனப் புலவர், திருவாவடுதுறையாதீன மகா வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் (அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்) 'ஞானப்பிரகாச மாலை' என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

ஸ்ரீலக்ஷ்ம்ஸ்ரீ என்பதுதான் ஸ்ரீலஸ்ரீ எனச் சுருங்கி வழங்குகிறது. இப்பேயர் உரிமை மகாசந்நிதானங்களுக்கே வழங்கி வருவது. தருமையாதீனத்தின் முதல் குருமகாசந்நிதானமாக விளங்கிய குருஞானசம்பந்தர் பாடிய தோத்திர சாத்திர நூல்கள் மனிதனுக்கு மிகவும் அவசியம். ஞானப்பிரகாசமாலை ஒரு தோத்திர நூல். ஞானப்பிரகாசம் பயிலத் தம் குருநாதரை வணங்கி வழிபடுகிருர் ஆசிரியர்.

திருவார் கமலையுள் ஞானப்பிரகாசன் திருவடிக்கீழ் வருவார் அவர் வழி வாரான் நமன். ஞானப்பிரகாசனுக்கு அடியான் எனும் பேரே படைமின் — பிறப்பு அறும் என்கிருர் குருஞான சம்பந்தர். குருஞான சம்பந்தரின் குருபக்தி இதனல் விளங்கும். ஞானப்பிரகாச மாலை நற்சைவர்கள் யாவரும் படிக்கவேண்டிய நூல்.

கல்வேட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள். (அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர்) 'திருக்கோயில்களில் கல்வேட்டு' என்னும் பொருளில் பேசியதன் சுருக்கம் :-

கல்வேட்டுகள் மூலம் அக்காலத்திய நாகரிகம், கலை, நடை உடை யர்வற்றையும் சிறப்பாக இடங்களையும் அறியலாம். சேருத்துணையார் என்றவர் (நாயன்மார்களில் ஒருவர்) கழற்சிங்கரின் மனைவி கடவுளுக்குரிய பூவினை மோந்த காரணத்தால் மூக்கினை அரிந்தார். இவரது ஊர் தஞ்சை என்று தேரிகிறது கல்வேட்டால். நன்னிலத்தின் அருகில் உள்ள தஞ்சாவூர் என்று தேரிகிறது. இப்படிப் பல விஷயங்களைக் கல்வேட்டுக்கள் மூலம் அறியலாம். கல்வேட்டுக்களைப் பாதுகாக்க வேண்டியது நமது முதல் கடமை.

(தோடரும்)

# புதுமைக்கு...

செஞ்சோற்கோண்டல்
**வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர் B. A.,**
தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

அன்புள்ள புதுமை,

வாழ்த்துக்கள். நான் எழுதிய கடிதத்தை உரிய காலத்துப் பேற்று மகிழ்ந்ததாக எழுதியிருந்தாய். ஆம்; அதுவும் ஒரு வியப்புத்தான். கடிதத்தை உரிய காலத்துப் பெறுவது என்பதை வியப்பாக்கிவிட்டது அண்மையில் நிகழ்ந்த வேலைநிறுத்தம். நடுவண் அரசியற் பணியாளர் திட்டமிட்டு ஆற்றிப் போதுமக்கள் வெறுப்புக்கு ஆளாகக் காரணமாக இருந்த இவ்வேலை நிறுத்தத்தால் எங்கே நான் எழுதிய கடிதம் உனக்குச் சேராமற் போய் விடுமோ என்று வருந்தியிருந்தேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு தோடங்கிய கருத்துச் சங்கிலியன்றோ அக்கடிதம்! நல்ல வேளை; தப்பிற்று. இந்த வேலைநிறுத்தத்தை எண்ணுகிற போது எனக்கோரு கருத்துத் தோன்றுகிறது.

தம்பி! உன் காலத்தில் மிக வேகமாகப் பரவிவரும் தோற்றுநோயாக உள்ளது இவ்வேலைநிறுத்தம். கடமையைச் செய்யாது கைவிடுவதே இதன் உள்ளுறை. இது தகுதி உடைய செயல்தானா என்று சிந்திக்க வேண்டும். குறைகள் இருக்கலாம். அவற்றைத் தேரிவிக்க இதுதானா வழி? இதனால் தோழிலாளி-தலைவர் மனநிலை குலைகிறது; உறவு குலைகிறது; கடுஞ்சீற்றமும், வெறுப்புமே எஞ்சுகின்றன. கடமையைத் தவருது செய்துகோண்டே உரிமை தேடல், நாடல் வேண்டும். அதுவே நல்வழி; பிறர்க்குத் தீமை பயவாத தோல்வழி. கடமையை மறந்துவிட்டு உரிமைக்குரல் கோடுத்தல் சரியா என்று உன்னைக் கேட்கிறேன். திருநாவுக்கரசர் திருவாக்கில் இரண்டு வரிகள் இந்தச் சிந்தனைக்குத் துணையாகின்றன. அவர் கூறுகிருர்: "'இறைவனுடைய கடன் அடியவனைத் தாங்குதல். அடியவன் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பது அவர் சேம்மோழி.

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

அருளியலிலே, சான்றோர் பயன் கருதாது பணி புரிவோர். 'பயன் தூக்கார் செய்த உதவி' என்பாரே திருவள்ளுவர், அதைப்போல. உலகியலில் இது பொருத்தமில்லைதான். ஆயினும், இந்த வரிகளில் கடமையுறுதியும், உரிமை விண்ணப்பமும் உறுதியாக உரைக்கப்படுதலை உற்றுநோக்கி உணர்தல் வேண்டும். என் கடன் பணிபுரிவதே என்ற கடமை உறுதியும், தன் கடன் தாங்குதல் என்ற உரிமை விண்ணப்பமும் ஆகிய இரண்டையும் அங்கே காண்கின்றோம்.

கடமை தெய்வத்தைப் போன்றது; அதனைக் கைவிடுதல் இறைமையைத் துறப்பது போன்றது. கடமையின் விளக்கமாகவே உலகம் இயங்குகின்றது. அதில் தவறியவனை மனிதனாக மதிக்கமாட்டார்கள் அறிவுடையோர். உன் காலத்தில் - ஆம் - கி. பி. 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலப் புலவர் ஹூப்பர் (Hooper) என்பார் எழுதிய 'கவினும் கடமையும்' (Beauty and Duty) என்ற பாடலைப்பற்றி உனக்கு நான் கூறவேண்டாம். நீயே நன்கு அறிவாய்.

"கண்ணுறங்கிக் கனக்கண்டேன்
கவினே வாழ்வென்றே;
கண்விழித்துக் கண்டதுவோ
கடமை வாழ்வென்றே"

என்ற பொருள்பட

'I slept and dreamed that life was Beauty;
I woke, and found that life was Duty"

என்று பாடியுள்ளார். வாழ்வே கடமைகளாலாயது என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ? 'வாழ்விற் பேரொளி காட்டும் வழித்துணை கடமையே' என்றும் கூறிப் பெரும்புலவர் வேர்ட்ஸ்வோர்த் வியக்கின்றானன்றோ? இத்தகைய சீரிய கடமையை இழப்பதோ 'அறிவினுறைய பயன்?' என்று கேட்கின்றேன்.

யாரோ ஒருவர் என்னைக் கேட்டார்; 'கடமை உறுதிபற்றி அப்பர் வாக்கை எடுத்துக் காட்டினீர்களே; பொருத்தந்தான். 'உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம் ஒணகாந்தன் தளிஉளீரே' என்று கூறும் சுந்தரர் செந்தமிழ் கேளீரோ. அவர் கூறுவது

வேலை நிறுத்தம் அன்றோ' நான் திடுக்கிட்டு விட்டேன். "வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடும் பாடல் அது. 'கங்கையாள் வாய் திறவாள். கணபதி வயிறுதாரி; குமரன் பிள்ளை; தேவியார் கோற்று அட்டி ஆளார் (கூலி கொடுத்து ஆட்கொள்ளமாட்டார்) ஆதலால் இக்குடும்பத்துக்கு ஆட்செய்ய மாட்டோம்' என்று தோழமை நிலையில் குறும்பு கலந்த புகழ்மொழியாகப் பாடுகிற பாடல் இது. கடமையில் வழுவாத அறவாழ்வு வாழ்ந்தவரே சுந்தரர்; வழுவிய போதெல்லாம் தண்டனையும் அவர்க்குக் கிடைத்தது'' என்று சுட்டிக்காட்டிய பின் அவர் அடங்கினார்.

இறைவன் கூலியாளாய் வந்து மண் சுமந்து பிரம்படிபட்ட திருவிளையாடல் வரலாறு பற்றி நீ அறிந்திருப்பாய் அல்லவா, புதுமை! அந்நிகழ்ச்சியும் கடமை உயர்வையும், கடமை பிழைத்தால் வரும் பிழையையும் விளக்குவதாகும். கடமையைச் செய்தற்கு முன்பே வந்தியின் பிட்டுக் கூலியாகிய உரிமையைப் பெற்றது முதற்பிழை; உரிமைப் பேற்றுக்குப் பிறகும் கரையடைத்தலாகிய கடமையின் வழுவியது இரண்டாம் பிழை. இவற்றைச் செய்தவன் இறைவனே எனினும் 'பிரம்படி' தண்டனையாகக் கிடைத்தது என்ற உண்மையை உற்று நோக்குதல் வேண்டும். அது மட்டுமோ? அரசாங்கப் பொருளை படைகோணரப் பயன்பட வேண்டிய பொருளை வேறு செயலுக்குப் பயன்படுத்தியது கடமையினின்று நழுவுதல் அல்லவா? அதனைச் செய்த மாணிக்கவாசகர்க்குத் தண்டனை இல்லாமற் போயிற்றா? ஆற்று மணலில் நிறுத்தி ஒறுத்தான் வேந்தன் எனக் காண்கின்றோம். இவ்வாறு புராண அடிப்படையிலும் இப்போதுமைக் கருத்துக்களே திகழக் காண்கின்றோம். புதுமை! இப்போது கூறு; கடமையை வழுவாது செய்தல் எத்துணை இன்றியமையாதது!

உன் காலத்துப் பலர்க்குக் கடமை யுணர்ச்சியைப் பற்றிய கவலையே இல்லையோ என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. ஏதோ பிறந்தோம் வாழ்கிறோம் என்று கவலையில்லாமல் வாழ்கின்ற வாழ்வே பலரிடத்துங் காண்கின்றேன். இதுவா வாழ்க்கை? 'நெஞ்சத்து அவலம் இலர்' என்று கூறியது போல, மனத்துக்கண் கவலை இல்லாது தேடிச் சோறு நிதந் தின்று - பல சின்னஞ்சிறு கதைகள் பேசிப் பொழுதுபோக்கும் வாடிக்கை வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? கடமையை ஒழுங்காகச் செய்தால் அதிலே ஓர் இன்பம், நிறைவு, மலர்ச்சி

மணம் தோன்றும். அதுவே வாழ்வின் இன்பம். அதனை அடைவதே வாழ்வின் குறிக்கோளாகும். அவ்வின்பத்தில் இறைமையைக் காணலாம்; என்றும் எங்கும் கிடைக்காத பேரின்பத்தைக் காணலாம்; எவற்றாடுங் கிடைக்காத இனிமையைக் காணலாம். அந்த முழு நிறைவை அடைவிக்கும் கடமையைவிடப் பெருமைதருகின்ற ஒன்று, வேறு, ஒருவனுக்கு உண்டு என்று எண்ணுகிறாய்?

பொன்முடியார் என்ற புலமைப் பெருமாட்டியின் பொன் மொழியைக்கேள் :- 'ஈன்று புறந்தருதல் என் கடன்; பெற்ற மகனைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடன்; அவனை வீர னாக்கி வேல் தந்து வீரவாழ்வுக்கு ஆற்றுப்படுத்துவது கொல்லர் கடன்; பெருவெற்றி தந்து மேம்படும் அவ்வீர மைந்தனுக்கு வயல்கள் முதலிய பரிசு தந்து பாராட்டுதல் மன்னன் கடன்; வாட்போரில் சென்று வெற்றிபெற்றுச் சிறப்புறுதல் காளையின் கடன்' (புறம் - 312) வாழ்வே கடமைகளால் ஆகியது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ? இந்நிலை இரண்டாயிர ஆண்டுகளுக்கு முந்திய தமிழ் வாழ்வு; இதே வாழ்வு சற்று முன்னும் பின்னும் மாறியிருப்பினும் இதன் அடைப்படை என்றும் மாறாது; உலகம் உள்ளளவும் மாறாது அல்லவா?

உன் கால மக்கள் வாழ்வில் இத்தகைய பேரொளி பிறங்க வேண்டுமென்பதே என் கனவு. அவரவர் கடமைகளை அவரவரும் அழகுற ஆற்றுதலே ஒரு சீரிய நாட்டுத்தொண்டாகும்; அதற்கு மாறாகச் செல்லுவதோ செல்ல நினைப்பதோ நாட்டுக்குச் செய்யும் பெரிய துரோகம் என்றே நான் சொல்லுவேன். எதற்கெடுத்தாலும் வேலை நிறுத்தம் வேலை நிறுத்தம் என்று போய்க் கொண்டேயிருத்தல் உலக அமைதி நெறிக்குச் செய்யும் துரோகமுமாகும். இந்தத் தொற்று நோய் ஒவ்வொரு துறையிலும் புகுந்து பரவி வருகிறது; அவ்வப்போது இதன் பயங்கரப் பிடியில் சிக்கி வருகிறது உலகு. இதனை நீக்க உடனடியாக ஒரு மருந்து வேண்டும். அந்த மருந்தை உண்டாக்குவது உன் பொறுப்பு. கட்டுடலும், கருத்துத் தெளிவும் உடையவராய் உலக மக்கள் வாழ்ந்து இன்புற வேண்டும்; அதனை நிறைவேற்ற இத்தகைய நோய்களைக் காலப்போக்கில் நீக்கியாக வேண்டும்; செய்வாயா?

அக

உனது ,மிழ்

பழனுவிச்

# வள்ளுவன் வழி

திரு. T. S. புருஷோத்தமன் அவர்கள், பேங்களூர்

(மலர் 19, இதழ் 8, பக்கம் 453 இன் தோடர்ச்சி)

நிற்க, 'தேய்வநூலில்' வரையப்பட்டுள்ள இரண்டாவது குறளைக்காண்போம். பண்பான வாழ்விற்கும் அன்பான உள்ளத்திற்கும் உத்தம சிந்தைக்கும் உயரிய கருத்திற்கும் அடிகோலுவன இந்த அழகான இரண்டடிகள். அறிவு நிலத்திலே, அன்பு முளைக்கு. குறள் உரத்தையிட்டால், தட்டா மல் கிட்டிய காலத்திலே பண்புப் பழமாகிய அதன் பயனைக் காணலாம் என்ற கருத்தை அளிக்கும் குறள் பல. கருப்பஞ் சாறு போன்று காணும் பல கருத்துக்கள் இக்குறட்பாக்களிலே போதிந்து கிடக்கின்றன. தோட்டனைத்தூறும் மணற்கேணி போலும், சுவைக்கச் சுவைக்க ஊற்றெடுக்கும் தாய்ப்பால் போன்று இக்குறளைக் கருத்துடன் ஆராய ஆராய பல அரிய கருத்துக்களை அறியலாம்.

கல்வியைப்பற்றிக் கூறவந்த வள்ளுவர் தன்சீரிய கருத்துக் களை 'கல்வி' என்ற பத்துப் பாட்டுக்களில் அடக்கமுடியாததை எண்ணி 'கல்லாமை' 'கேள்வி' என்று வகுத்துக்கூறிய தன்றியும் 'அவை அஞ்சாமை' 'அறிவுடைமை' 'சோல் வன்மை' 'பயனில சோல்லாமை' என்று பலவாகப் பகுத்து அவை அனைத்தையும் கல்வியோடு தோடர்புடைய அதிகாரங் களாகத் தோகுத்து விளக்கியுள்ளார். இவ்வளவு அதிகமாக அவர் வேறு எதனையும் கூருமல் கல்வியின் கரையை ஓர் அளவு காணபித்த வள்ளுவர்

"கற்றதனு லாய பயனேன்கோல் வாலறிவன்
நற்றுள் தோழாஅர் எனில்"

என்கிருர். இதன் கருத்தாவது:- உண்மை உணர்வுடையவ னின் தூய திருவடிகளைத் தோழாமல் எவ்வளவு நூல்களைக் கடறக் கற்றுலும் அறிஞனுகப் பட்டம்பேற்றுலும் அவை அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர் போன்றது என்று வலி யுறுத்துவது ஆராய்ச்சியாளர்கள் அறிவர். இக்குறளுடன் அறிஞர்களின் கருத்தைச் சிறிது ஒப்பிட்டுப்பார்க்கலாம்

உலகிலுள்ள அறிவுக் களஞ்சியமாகிய புலவர் பெருமக்கள் கருத்துக்கள் அனைத்தும் ஒத்திருப்பது அரிதரிது. அவர்களின் அறிவுச்சுடர் அளிக்கும் பிரகாசம் பல்வேறு வகையானதாகக் காணப்படும். அதாவது சூரியன், சந்திரன் நட்க்ஷத்திரங்கள் அளிக்கும் பிரகாசத்தில் வித்தியாசம் காணப்படுவதைப் போன்றது என்று கூறலாம். ஆனால் ஆண்டவனை அஞ்சலி செய்யும் முறையைக் குறித்துக் கிழக்கு மேற்கு நாடுகளில் உள்ள கவிஞர்கள் அனைவரும் ஒரே ஒளியைக்கொண்டு, அதன் வழியாக ஆண்டவனை ஒரே நோக்குடன் கண்டு, மகிழ்ச்சி கொண்டார்கள் என்பது ஆராய்ச்சிப்பயன். பல்லாயிரம் மைல் களுக்கப்பால் உதித்த கிறிஸ்துவ மறையின் கொள்கையைக் காணலாம். "Verily! when the day of Judgment comes, ye shall not be asked what you have read. but what you have done. It is easier for a camel to go through the eye of a needle than for a sinner to enter into the kingdom of God" உலக மக்கள் அனைவரும் இறந்த பிறகு அவ்வனைவரையும் எழுப்பிப் பரமபிதாவாகிய ஏசு கிறிஸ்து அவரவர்களின் செய்கைகளுக்கு ஏற்ப தீர்ப்பு அளிப்பார். அத்தீர்ப்பளிக்கும் நாளிலே ஒவ்வொருவரும் நாட்டு மக்களுக்கு நலம் பயக்கும் காரியங்கள் எவ்வளவு செய்து உள்ளார்கள் என்றும், நாட்டிலும் காட்டிலும் வாழும் ஜீவராசி களுக்கு எவ்வளவு அன்பு காட்டினார்கள் என்பதும் அவர் தீர்ப்பிற்கு (Judgment) சான்றுகளாகச் சேர்த்துக்கொள்ளப் படும். ஆகையால் பட்டம் பதவிகள் அனைத்தும் மறுமையில் பயன்படாது. கல்லும் கசிந்துருகக் கருணைச்சுடர் ஒளியின் புகழைப்பாடி மனத்தாமரையிலே "மலர்மிசை ஏகினானின் மாணடிகளை" வைத்து அனுதினமும் அஞ்சலி செய்பவர் அவன் அன்பிற்கும், அருளுக்கும் ஆளாவர். பாத்திரமாவர்.

ஓர் ஊசியின் காதாகிய அச் சிறிய துவாரத்துள் ஒரு பெரிய ஒட்டகம் சென்றாலும் செல்லலாம்; ஆனால் பாவம் செய்த மக்கள் ஆண்டவனின் ராஜ்யத்துள் அணுவளவாகிலும் ஊர்ந்துகூடச் செல்லல் அரிது என்று உறுதியாக, அழகாக எடுத்துரைத்துள்ளார். இவ்வரிய கருத்தைக் கன்னித் தமிழ் நாட்டில் தோன்றிய ஆண்டவனின் அவதாரமாகிய அறிவிச் சுடர் 'சங்கரர்' கூறுகிறார்.

" भज गोविन्दं भज गोविन्दं भज गोविन्दं मूढमते ।
संप्राप्ते सन्निहिते काले नहि नहि रक्षति डुकृञ्करणे ॥

வளமான வடமொழியில் வரையப்பட்ட இக்கருத்தை செம்மை பொருந்திய செந்தமிழிலே செவ்வையாக எடுத்துரைத்துள்ளார், இப்புவிக்குப் புலமையின் ஆழத்தையும் அகலத்தையும் காட்டி வார்த்தை பத்தாயிரத்தில் ஒருவர்' என்று ஔவையின் வாக்கிற்கு இலக்கியமாகத் திகழும் நாமக்கல் கவிஞர் அவர்கள்.

வாழிகோவிந்தன் வாழிகோர்விந்தன் வாழிகோவிந்தன்
என்பதல்லால்
மதிகெட்ட மனமே! வேறுவழியில்லை; வாய்மை சொன்னேன்
ஏழையே மரணம் வந்திங் குன்னுயிர் ஏகும் போதில்
ஏது உனைக் காக்கும் அந்தக் கோவிந்தன் சரணம் இன்றேல்?

கோழையே! காலன் வந்து வாவெனக் கூவும்போது
கோ! என அழுது நொந்தே ஆ! என அலறுவாயே!
காளையே! கற்ற தோன்றும் கவைக்குத வாது கண்டாய்
காத்திடும் பஜகோவிந்தம் கதிதரும் பஜகோவிந்தம்

இக்கருத்துக்களையும் 'கற்றதனாலாய பயனென்கொல் வாலறி வன் நற்றாள் தொழா அர் எனில்' என்ற குறள் கருத்தையும் ஒப்பிட்டால் காணும் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனியாம்

" காலன் வருமுன்னே கண் பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய்ப் படுமுன்னே — மேல்விழுந்தே
சுற்ற எழுமுன்னே யூரார் சுடு முன்னே
குற்றாலத் தானையே கூறு "

என்று பட்டினத்தடிகள் பாடுவதும்; 'உற்றார் ஆருளரோ உயிர்கொண்டு போம் பொழுது, குற்றாலத் துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் ஆருளரோ" என்று திருநாவுக்கரசர் பாடுவதும் பண்பட்ட உள்ளத்திற்கு ஒப்பற்ற விருந்து, அனலிலிடப்பட்ட மேழுகுபோன்று உயிருருகி, உள்ளுருகி, ஊனுருகி, உள்ளத்தில் உண்மையொளி உண்டாகி, வாக்கி னிலே உண்மை ஒலி உண்டாகி கல்லையும் கனியச்செய்யும் இப்பாக்கள் கற்றவரையும் மற்றவரையும் களிப்பூட்டி 'அரு வுருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்' என்று

சித்தியார் கூறிய எல்லாம்வல்ல கடவுளின் நினைவை நம் கருத்தில் இருத்துகின்றது. 'நல்லவையுள் நன்கு செலச் சொல்லும்' செந்தமிழ்த்தாயின் செல்வப் புதல்வன் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை கூறுவதைப் போன்று 'எண்ணவரும் புதுமைகளை நுண்ணிய கலைகளில் காணுந் தோறும், விண்ணிலும், மண்ணிலும், கனலிலும் புனலிலும் கலந்துறையும் பரமனைக் குறித்து நம் உள்ளம் பள்ளத்தில் பாயும் வெள்ளம் போன்று செல்வதும்', சுட்டிக்காட்ட எட்டாத கருணைச் சுடர் ஒளியைக்காண நம் சிந்தனை சிறகடித்துப் பறப்பதும் இயற்கை. ஆனால் அவ்வுணர்ச்சியை வளரவிடாமல் தடுப்பது செயற்கை. இங்கு

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்று காணப்படும் குறள் ஆராயத் தகுந்ததே. இருள் என்றதும் நம் கண்கள் மருள்கின்றன. அருள் சூழ்ந் துள்ள வையத்தை அடைய விரும்பாமல் இருள் சூழ்ந் துள்ள இவ்வையத்தில் 'பொன்னையே தெய்வமென்றும், போகமே வாழ்க்கை யென்றும், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றும் மதிமயங்கி, அறம் மங்கி, மறம் பொங்கி காலத்தைக் கழிக்கின்றோம். இக்காலத்தைக் களவாடும் காலன் கையிலிருந்து விடுபெற, வீடுபேறு பெற உதவுவது வள்ளுவர் வழி. மேற் கூறிய குறளுக்கு 'இருளை அளிக்கும் நல்வினை தீவினைகள் இறைவனைப் புகழ்ந்து பாடுபவர்களிடம் அணுகா' என்பது பொருள். ஒளியிருக்குங்கால் அங்கு இருள் அணுகாது என்பது உண்மை ஆகையால் ஆண்டவனிடம் காணும் ஒளியை அறியும் ஆற்றலும் பண்பட்ட பக்குவ நிலையும் உண்டாகப்பெற்றால் அதுவே நுண்மதியினும் மேம்பட்டது. 'இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்று கசிந்துருகிப் பாடுகிறார் நற்றமிழ்க் கொற்றவராகிய நாவுக்கரசர். 'தாவடி யோட்டும் மயிலிலும் தேவர் தலையிலும் என் பாவடியேட்டிலும் பட்டதன்றே' 'சதகோடி சூரியர்கள் உதயமென ஒளிவீசும்' நின்பாதம் என்று கூறிக் களிப்புக்கொள்கிறார் 'பிறப்பென்னும் பேதைமை நீக்கிச் சிறப்பென்னும் செம்பொருள்' கண்ட அருணகிரிநாதர்.

(தொடரும்)

வள்ளுவர் வாக்கில் :

# செல்வம்

**வித்துவான், திரு. ம. சிவசம்பு அவர்கள்**
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 19 இதழ் 8 பக்கம் 436 இன் தொடர்ச்சி)

## செல்வம் சேர்க்கும் வழி :

செல்வம் சேர்க்கப் பலரும் ஆசைப்படுகிறார்கள். ஆனால் அதற்குள்ள வழிகளைச் செய்வதில்லை. செல்வம் வேண்டுமானால் முயற்சி உள்ளவனாக, குறையாத ஊக்கம் உள்ளவனாக இருக்கவேண்டும்,

நல்லசெயல்களைச்செய்யவேண்டும். தீயவினைகளைச் செய்யக் கூடாது. நாம் செய்கின்ற வினைதான் நமக்குச் செல்வம் சேருவதற்கும் போவதற்கும் காரணமாக இருக்கிறது. நம்முடைய வாழ்வு தாழ்வு எல்லாம் நம்முடைய செயலால் விளைகிறது. நம் வினையாகிய ஊழ் பயன் நோக்கி வேலை செய்கிறது. அது ஆகூழ், போகூழ் எனப் பிரிந்து நின்று வேலை செய்கிறது. நாம் செய்வது நல்வினையானால் அது நமக்கு ஆகூழாக மாறி முயற்சியை உண்டாக்கும். தீவினை செய்தால் அது போகூழாக மாறி நமக்குச் சோம்பலை உண்டாக்கும். சோம்பல் நம்மால் உண்டாக்கப்பட்டதுதான். நாம் விடாது முயற்சிசெய்தால் மடியைக் கொடுக்கும் போகூழை மாற்றி ஆகூழாகச் செய்யமுடியும்.

" ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி "

## நல்வினை எது !

நல்வினை செய் என்கிறாயே! எது நல்வினை என்று கேட்கலாம். இதோ! சொல்லுகிறேன். முகமலர்ந்து நல்ல விருந்து செய். மனம் மகிழ்ந்து உன் வீட்டில் திருமகள்

தங்குவாள். சுற்றத்தாரைப் பேண். அன்பு நீங்காத சுற்றம் நமக்குக் கிடைத்தால் அது மேன்மேலும் வளர்ச்சி குறை யாத செல்வம் பலவற்றைக் கொடுக்கும். பலருக்குக் கொடுத்து பகுத்துண்டு வாழ். உணவைப் பகுத்துக் கொடுப்பதில் காக்கைபோல் வாழ்; இதுவே நல்வினை, இச்செய்கையே நமக்குச் செல்வத்தைக் கொடுக்கும். இக்கருத்தை :

" அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்"

விருப்பருச் சுற்றம் இயையின் அருப்பரு
ஆக்கம் பலவும் தரும் "

" காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க் கேயுள "

என்ற குறள் மூலம் அறிவிக்கிறார்.

## தீவினை எது!

தீவினை செய்யாதே என்கிறாயே? எது தீவினை என்று கேட்கிறாய். முதலில் பொருளாசை காரணமாகப் பிறன் பொருளை விரும்பாதே. பிறன் செல்வத்தைக்கண்டு பொறுமைப்படாதே. ஆசை காரணமாகப் பொருளைக் களவு செய்யாதே. வஞ்சனை செய்து பொருள் சேர்க்காதே. களவுசெயது சேர்த்த பொருள் முதலில் பெருகுவதுபோல இருக்கும். பின்னால் உள்ள செல்வத்தையும்கெடுக்கும். வஞ்சனையால்சேர்த்தபொருள் சுடாத மண்பானையில் தண்ணீர் ஊற்றிவைத்ததுபோலக் கொஞ்சம் கொஞ்சமாகக் கெடும். இவ்வழிகளில் பொருள் சேர்க்காமல் அறவழியில்தான் பொருள் சேர்க்கவேண்டும். அறம் இது என்று அறிந்து பிறன் பொருளை விரும்பாது இருந்தால் திருமகள் திறம் அறிந்து சேர்வாள் என்கிறார்.

"அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்றில்லை" என்றார் வள்ளுவர். "ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு" என்றார் ஔவையார். (ஔவியம் - பொறுமை).

" களவினால் ஆகிய ஆக்கம் அளவறிந்து
ஆவது போலக் கெடும் "

" சலத்தாற் பொருள் செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று "

" அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு "

அறவழியில்தான் பொருள் சேர்க்கவேண்டும், அறம் அல்லாத வழியில் பொருள் சேர்த்தால் இம்மையும் மறுமையும் துன்பம் செய்யும் என்கிறார் கடுங்கோவும். " செம்மையின் இகந்து ஒரீஇப் பொருள் செய்வார்க்கு அப்பொருள் இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ " என்று கூறி வற்புறுத்துகிறார்.

**செல்வத்தைக் காக்கும் வழி :**

சேல்வத்தைச் சேர்த்தால் மட்டும் போதாது. அதைக் காக்க வழிதெரிய வேண்டாமா? வந்த செல்வத்தைப் போற்றி வாழவேண்டாமா?. " பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை " என்றார் வள்ளுவர். " பொருள்தனைப் போற்றிவாழ் " என்றார் ஔவையார். செல்வத்திலே நீ சோழனுக்கு ஒப்பாக இருந்தாலும் வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டும். இல்லையேல் செல்வம் நிலைக்காது. " வளவன் ஆயினும் அளவு அறிந்து அளித்து உண் " ( கொன்றை 81 ). ஆனமுதலில் அதிகம் செலவுசெய்யக்கூடாது. பொருளை வழங்கும் பொழுது கவனித்து வழங்க வேண்டும் ; தக்க வழியில் பிறர்க்குக் கொடுக்கும் பொழுதும் அளவறிந்து கொடுக்க வேண்டும். இதுவே பொருள் போற்றி வழங்கும் நெறியாகும்.

" ஆற்றின் அளவறிந்து ஈகவது பொருள்
போற்றி வழங்கும் நெறி. " (குறள். 477)

இதே கருத்தை, " சைஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண் " ( கொனறை. 14 ). ( சை என்பது செல்வத்தைக் குறித்தது ). இதுமட்டும் போதாது ; பொருள் வரும் வழி குறைவாக இருந்தால்கூடப் பரவாயில்லை. போகும் வழியைச் சுருக்கிக் கொள்ளவேண்டும். அளவறிந்துவாழவில்லையானால் நாம் கெட்டு விடுவோம் ; தனக்குள்ள பொருள் உள்ள அளவை ஆராயாமல் பிறர்க்கு உதவிசெய்தல் அது நம்முடைய செல்வத்தையே கெடுக்கும் என்று அறிவிக்கிறார்.

" ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை."

" அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்."

" உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்."

பெற்ற செல்வத்தைப் பெற்றோம் என்று ஒப்புதல் தேற்றாதவர் பொருள் அற்றேம் என்று அல்லற்பட நேரிடும் என்று எச்சரிக்கை செய்கிறார்.

**செல்வம் குறையாது இருக்க வழி :**

பெற்ற செல்வத்தைப் போற்றி வளர்க்கவேண்டும். அல்லது குறையாமலாவது காத்துக்கொள்ளவேண்டும். செல்வம் குறையாது இருக்கவேண்டுமானால் பிறர் பொருளை விரும்பாதே. அழுக்காறு கொள்ளாதே. அழுக்காறு என்னும் பாவி உன் பொருளை அழித்து உன்னைத் தீயவழியில் செலுத்திவிடும். கோபப்படாதே. கோபப்பட்டால் நம் செல்வம் குறையும். பிறர் அழும்படியாகப் பொருள் சேர்க்காதே. பிறர் அழும்படியாகப் பொருள் சேர்த்தால் அவர்கள் விட்ட கண்ணீர் உன் செல்வத்தைத் தேய்த்துக் குறைக்கும். பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் பெற்றவன் வருந்துமாறு செய்து போய்விடும். நல்ல வழியில் வந்த செல்வம் இழக்கப் பட்டாலும் பிறகு பயன்தரும்.

" அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்."

" அழுக்காறு என ஒருபாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்."

" சீறின் சிறுகும் திரு."

" அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

" அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை."

(தொடரும்)

# உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B. A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

(மலர் 19, இதழ் 8, பக்கம் 457 இன் தொடர்ச்சி)

## புளியாரை 7

தெலு:- புளி சிந்தாகு, மலை:- புளி யரலா, சம்ஸ்:- சங்கேரி.

இம்மூலிகை ஈரமிருக்கும் இடங்களிலும், நிழல் தங்கியுள்ள இடங்களிலும் இருக்கும். இதன் இலை சிறியது. மேன்முல் புளியங்காயைப்போல் புளிக்கும். ருசியும் வாசனையும் உள்ளது. இதில் பச்சை, சிகப்பு என்ற இரண்டு வகைகளுண்டு. எதுவாயினும் சரி, பல பிணிகளை அகற்றும், பசியுண்டாக்கும் பித்தத்தை ஒழிக்கும்.

### உபயோக முறை

இதைத் துகையல் செய்து சாப்பிடலாம். கோத்தமல்லியை உபயோகிப்பது போல் சாம்பார் கூட்டுகளில் போடலாம். சூரணம் செய்து ஒரு சிட்டிகை தேனில் காலை மாலை சாப்பிடலாம். இதன் சுரசத்தைச் சர்பத்தாகச் செய்து உட்கோண்டால் மிகவும் நலம். இதிலும் உப்பேடுத்து சாப்பிடலாம்.

குறிப்பு:- இதில் நிமினை சத்துள்ளது.

சிகப்புப் புளியாரையை கந்திக்குக் கவசம் செய்து சிறு புடமிட கேந்தி சேந்தூரமாகும். பல பிணிகளுக்குக் கோடுப்பதுடன் சரீர காந்தியையும் உண்டாக்கும்.

## சிவகரந்தை 8

தேலு :- போடதரமு, சம்ஸ் :- ஹபுஷா.

இது ஓர் குத்துச்செடி. இச்செடி இருக்கும் இடத்தில் அருமையான வாசனை வீசும். இது எல்லா இடங்களிலும் கிடைக்காது. சில இடங்களில் மூலிகை விபரம் தெரிந்தவர் களே இதைக் கண்டுபிடிக்க முடியும். விளையும் இடங்களில் ஏராளமாய் முளைக்கும். இம்மூலிகை சிதம்பரத்தில் நடராஜ ருக்குப் பூஜைக்கு விசேட தினங்களில் உபயோகிக்கப்படுகிறது. குற்றாலம், பாபநாசம் முதலிய இடங்களிலும் கிடைக்கிறது. இதை வைத்துப் பயிர் செய்ய முடியாதென நினைக்கிறேன். வேர் வேட்டிகள் மூலம் இதைப் பெறலாம். மருந்துக் கடைகளில் கிடைக்காது.

### உபயோக முறை

வேரை நீக்கி நிழலில் உலர்த்தி இடித்து முதலில் சல்லடை யில் சலித்துப் பிறகு வஸ்திரகாயம் பிடித்து சூரணத்தைத் தேனில்கொள்ள வெகு வாசனையாகவும், ருசியாகவும் இருக்கும். இதை மூன்று மாதங்கள் காலை மாலை உண்டுவர உடம்பிலுள்ள துர்நாற்றம் அறும். பல பிணிகளை நீக்கி ரத்தத்தைச் சுத்தி செய்யும்.

குறிப்பு :- இதில் வங்க சத்துள்ளது,

## நன்னாரி 9

தேலு :- சுகுந்தபாலா, மலை :- நன்னாரி, சம்ஸ்:- சரிபா.

இது தேகசித்தியை உண்டாக்குமென்பது ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் அனுபவம். இது ஓர் நறுமணமுள்ள கோடி. இதை அறியாதவர்கள் சிலரே இருப்பர். மலைகளில் வளரும் ஒரு வித நன்னாரி மாகாளிக் கிழங்கு என அழைக்கப்படுகிறது. இதை ஊறுகாயாகப் பலர் உபயோகித்து வருகிறார்கள். மாகாளி காய் கறி கடைகளிலும், தெருக்களிலும் சில சமயங்களில் விற்கப் படுகிறது. உலர்ந்த நன்னாரி வேர் நாட்டு மருந்துக் கடைகளில்

கிடைக்கும். பச்சை வேர் விசேஷம். இது கிடைக்காவிடில் உலர்ந்த வேரை வாங்கி உபயோகிக்கலாம்.

### உபயோக முறை

ஷர்பத்:- பச்சை வேர் (அ) உலர்ந்த வேரை நன்முக இடித்து 10 பலம் வேருக்கு 2 படி ஜலம் விட்டு ¼ படியாக வற்றக்காய்ச்சிப் பிசறி வடிகட்டி அதில் ½ வீசை சீனி கலந்து பாத்திரத்திலிட்டுக் காய்ச்சிப் பாகு வரும் சமயம் இறக்கி குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் கொஞ்சம் அதிலிட்டு புட்டியி லடைத்து காலே மாலே ஜலத்தில் மூன்று தேக்கரண்டிகளிட்டு சாப்பிடலாம். ரத்தத்தைச் சுத்திசெய்யும். மேக நீரை ஒழிக்கும்.

காபி:- நன்னரி பலம் 5, கோத்தமல்லி பலம் 5, பறங்கிப் பட்டை பலம் 2½, மேல்தோல் நீக்கிய சுக்கு பலம் 1, வறுத்த நத்தைசூரி விதை பலம் 2, இவைகளை இடித்துச் சூரணம்செய்து தண்ணீரிலிட்டுக் கஷாயமாக்கிப் பால் சீனி சேர்த்து காலே மாலே சாப்பிட பசியைத் தூண்டும், நீரைப்பிரிக்கும், ஆரோக்கியமா யிருக்கும். நத்தைசூரி விதை கிடைக்காவிடின் அதை அகற்றி மற்றவைகளை நாட்டு மருந்துக்கடைகளில் வாங்கி மேற்சொன்ன படி உபயோகிக்கலாம்.

இம்மூலிகையை நைய இடித்துச் சட்டியிலிட்டு லிங்கம் (Mercury Sulphate) சிறு துண்டுகளாக அதன்மேல் வைத்து மேலும் சூரணமிட்டு சட்டி மூடி மண்சீலே சட்டிகளுக்குச் செய்து உணர்த்தி எறிக்க மேல் சட்டியில் சுத்தமான ரசம் ஏறும். அதைச் சுரண்டி மருந்துகளுக்கும் வகாரத்திற்கும் உபயோ கிக்கப்பட்டுவருகிறது.

## பேயன் வாழை 10

சித்தர்கள் வாழைக்காயாவது, பழமாவது சாப்பிடமாட் டார்கள். சிலர் வாழைப்பழம் சாப்பிடுவதால் மலசுத்தியாகு மென்று நினைப்பது சாஸ்திரத்திற்கு விரோதம். அதிலும் காய் மிகவும் வாதகுணமுடையது. மலத்தை இறுக்கும்.

ஆனால் பேயன் வாழை ஒன்று மாத்திரம் காயசித்தியைத் தரக்கூடியது. இப்பழம் பூவம்பழத்தைக் காட்டிலும் சிறிய தாயும், பழத்தின்பேரில் சாம்பல் பூத்தும் இருக்கும். சில ஊர்களில் இதை நாட்டுப்பழமென்றழைக்கின்றனர். இப்பழ மொன்றே மலசுத்தி செய்யும்; குடலிலுள்ள புண்களை ஆற்றும்; கொடுமையான உடல் வெப்பத்தைத் தணிக்கும் வல்லமை யுடையது. இதன் பூவை இடித்துச் சாறு பிழிந்து ஒரு அவுன்ஸ் முதல் இரண்டு அவுன்ஸ் பூங்காவி ஒரு சிட்டிகையிட்டு பெரும் பாட்டிற்குக் கொடுப்பது உண்டு.

இதன் பழம் சில பழக்கடைகளில் கிடைக்கும். இராமலிங்க சுவாமி இந்தப் பழத்தைக் காயசித்திகளுள் ஒன்ருகக் குறிப்பிட் டுள்ளார். (தொடரும்).

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் தனிப்பொலிவும் தூய்மையும் விளங்குவது உலகமறிந்து வியந்து பாராட்டும் சிறப்பாகும். இன்று 13—3—60 நாங்கள் தருமைத் தமிழ்க் கல்லூரி மாணவர்களைச் சுற்றுலா அழைத் துக்கொண்டு காலை 6 மணி வழிபாட்டுக்கு வந்து சேர்ந்தோம். கோயிலில் நல்ல விளக்கமும் தூய்மையும் பொலிவும் விளங்கின: திருக்கோயிலில் ஸ்ரீமத் கட்டளை சுவாமிகள் அவர்கள் இன்முகத் துடன் வரவேற்றூர்கள். வழிபாடுகள் செய்வித்தருளிஞர்கள். சூப்பரின்டெண்ட் திரு. அய்யங்கார் அவர்கள் உடனிருந்து எல்லாவற்றினையும் நன்கு கவனித்துச் சிறப்பித்தார்கள். இங்கு எங்களுக்குக் கிடைத்த சிறப்புக்கள் எழுத்தில் எழுதவும் முடி யாத தனி மதிப்பாகும்.

இன்னணம்,
(40 பேர்) சுற்றுலாக் குழுவினர்,
ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

# விக்ரக ஆராதனை

திரு. ஏ. ஆர். ராஜாமணி அவர்கள்
செய்தியாளர், புது டில்லி.

விக்ரகம் என்பதற்கு விசேஷமாக மனத்தைக் கிரஹிப்பது என்றுபொருள். மனம் பஞ்சேந்திரியங்களுடன் கூடியது. அந்த மனமும், அழகாயும் - ஆனந்தமாயும் உள்ள வஸ்துக்களிடமே அதிகமாக ஈடுபாடு கொள்ளும் தன்மை வாய்ந்ததாக அமைந்துவிட்டிருப்பது இயற்கை செய்த நன்மைகளில் ஒன்று. அப்படிப்பட்ட - அழகுணர்ச்சியை ஈர்க்கும் உணர்வுள்ள மனத்தை வசப்படுத்திக் கட்டுப்படுத்தத் திடமான ஓர் வஸ்துவைக் காட்டுதல் அவசியமாயிற்று. ஆதலால்தான், அநித்திய அழகிய பொருள்களில் மதிமயங்கி - மனிதவர்க்கம் புறவாழ்க்கையில் அழுந்திவிடக் கூடாதென்ற நல்ல நோக்கத்துடன், புராணங்களில் சொல்லியுள்ளபடி மிக அழகியதும் - ஆத்மானுபூதியின்பத்தைக் கொடுக்கவல்லதுமான ஸ்ரீ ராமன், விக்கின விநாயகர், கோபாலகிருஷ்ணன், தில்லை நடனராஜன் போன்ற தெய்வாம்சம் மிக்க அவதார - அழிவற்ற பிரதிமைகளைப் படைத்து - அவைகளை நன்குக அலங்கரித்து - பாரம்பரியத் தன்மைக்கும் - குடும்பச் சுழலுக்கும் உகந்தவாறு வழிபடும் முறை உருவாயிற்று.

முதிர்ந்த தத்துவ ஞானிகளுக்கும் - தீர்க்தரிசிகளுக்கும் உருவ வழிபாடும் - துதிமுறையும் தேவையில்லை என்பது ஒப்புக்கொள்ளத்தக்க உண்மையே; ஆயினும் அந்தத் தவ சிரேஷ்டர்களுங்கூட தம் உபதேச மொழிகளை எதிர்நோக்கியுள்ள சமுதாயத்தின் மனநிலைக்குகந்தவகையிலும்-பன்னெடுங் காலமாக வழக்கில் வாழ்ந்துவரும் தார்மீக வழிபாட்டிற்கிசைந்த முறையிலும் 'குறிப்பிடத்தக்கதொரு' உருவ ஆராதனையை அங்கீகரித்து - அதற்கான விதிமுறைகளையும் ஈசனை வழிபடத்தக்க துதிவகைகளையும் போதிக்கவேண்டிய கடமையை உணர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். உதாரணமாக இன்று பட்டத்திலுள்ள காஞ்சி காமகோடி பீடாதிபதிகளையும், தமிழ் வளர்க்கும் ஆதீன கர்த்தாக்களையும் குறிப்பிட்டு - அவர்களது சமய சேவையைக் கணித்து மகிழ்ந்து-பயன்பெற்று உய்யலாம்.

ஹிந்து மதத்திற்கென ஆசாரிய சுவாமிகளும் - ஆதீனங்களும் - இன்ன பல்வேறு மடத்துத் தலைவர்களும் பணியாற்றி வருவதுபோல் - ஏனைய பல மதங்களின் கோள்கைகளைக் கட்டிக் காப்பதற்கும் - மதக் கருத்துக்கள் வளர்ந்துவரும் நாகரீகத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு நசித்துவிடாமல் தடுப்பதற்குமெனப் பலர் கடனுற்றிவருவதிலிருந்து-உலகத்தின்நல்வாழ்விற்கு மதங்கள் எவ்வளவு அத்யாவசியமாகின்றன என்பது புலனுகிறது. எல்லா மதக் கருத்துக்களின் அடிப்படை ஒன்ருயினும் - அவைகளைக் கைக்கோள்ளும் சடங்கு முறைகளில் பேதம் தோன்றுவதும் - மதத்தின் உட்பிரிவுகளுக்கேற்ற வகையில் அவரவர் உருவ வழிபாட்டு முறையும் - வர்ணுசிரம தர்மமும் மாறுபட்டு இயங்குவதும் கவனிக்கத்தக்கதே. என்ருலும் எல்லாச் சமயத்தாரிடமும் 'சின்னங்களை மதச்சார்புடைய முறையில் அங்கீகரித்துக்கோண்டு - அப்படி அங்கீகரிக்கப்பட்ட மதச் சின்னங்களுக்குரிய புனிதமான எண்ணங்களையும், வழிபாடுகளையும் நல்கி வருவது ஈண்டுக் கவனிக்கத்தக்கதாகும். இந்த அடிப்படையில் நாம உலக மதங்களை அணுகி - அந்த மதச்சார்புள்ள மனிதர்களின் லோகாயத உணர்வுகளை அறிமுகப்படுத்திக் கோள்ள விழைந்தால் - விக்ரக ஆராதனையை - எல்லா மதங்களும் ஏற்றுக்கோண்டிருக்கின்றன என்பது தெரியவரும். ''சமயக்கோள்கைகள் எதை ஆதரிக்கவேண்டும் என்று தன்னைப் பின்பற்றுபவர்களுக்குக் கட்டளையிடுகின்றனவோ அவைகளே ஆராதனைக்குரிய விக்ரகங்களாகுகின்றன'' என்றபடி மேலை நாட்டுத் தத்துவஞானி ஒருவர் கூறியது நினைவு கூரத்தக்கது.

இந்தக் கண்ணுேட்டத்தில் - கிறிஸ்துவ மதத்தினர், ஆதி ''போப்பாண்டவர்'' உபதேசத்தைப் பின்பற்றி, பைபிளுக்கும், மாதாகோயில்களுக்கும் - செஞ்சிலுவைச் சின்னங்களுக்கும் மதிப்பளிக்கும் குணவியல்புகளையும், மஹமதியர்கள் மசூதிகளுக்கும் குரான் வேதத்திற்கும், சமாதி கட்டிடங்கள் உருவில் உள்ள மேளல்விகளின் அமர உருவங்களுக்கு வழிபாடு செய்யும் நிகழ்ச்சிகளையும் ஆராய்ந்தோமாளுல் நம்முடைய தமிழ் நாட்டுப் பாமரனுெருவன் பக்திப்பெருக்கில் தன்னைமறந்து

"கண்ணன் முகம்கண்டால் போதும்
கவலையெல்லாம் மறந்தே போகும்."

என்றபடி ஆடிப்பாடி அகமகிழ்வதின் நோக்கமும் - அந்தக் கண்ணன் 'உருவச்சமைப்பில்' அவன் அடைந்த ஆத்மத் திருப்தியும் புலனுகும். விக்ரகங்களைக் காணும்போதெல்லாம் 'ஸ்வாமி' என்ற உணர்ச்சிதான் நம்மவர்களிடையே தோன்று கிறது. அது, மண்ணுல் செய்யப்பட்டதா அல்லது பொன்னுல் வார்க்கப்பட்டதா என்ற எண்ணங்கூட அந்த க்ஷண நேரத்தில் தோன்றுவதில்லை. அப்படியே ஸ்வாமி என்று நினைத்து ஸ்வாமி யாகப் பாவித்து எதிரில் நின்று உற்றுநோக்குகிறேம். அப் போழுது நெஞ்சு நிறைய ஆண்டவன் நினைவே பொங்கித் ததும்புகிறதல்லவா? இந்தப் பெரும்பேறு, அநுபூதிநிலை எப்படி ஏற்பட்டது? வழிவழித் தொடர்பாக விக்ரக ஆராதனை யால் ஏற்பட்ட விளைவுகளல்லவோ இவை!

நமது சாஸ்திரங்கள் "அபீ; அபீ" (பயமற்றவர்) என்று முழங்கி - பகவானது திடநிலையை நமக்கு உணர்த்துகின்றன. அவனடியார்களும் பயமற்றவர்களாகி வாழவேண்டுமெனில் அதற்கென வழிபாட்டுச்சின்னமொன்று வேண்டாவோ?

"எல்லாப் பூஜைகளின் சாரமும் இவ்வளவே தூய்மை அடைதலும், பிறர்க்கு நன்மை செய்தலுமே". அவன் 'சிலையினிடத்து மட்டும்' சிவனைக் காண்பவனுயின் அவனது வழிபாடு தன்னைத் தயாரித்துக்கொள்ளும் செயலினளவேயாகும் என்றபடி சீற்றமிகு வார்த்தைகளை எல்லா உயிர்களிடத்திலும் சிவனைக்காண முயற்சிக்காதவர்களைக் குறித்து உபயோகிக்கும் தத்துவக்கடல். ஸ்வாமி விவேகானந்தர்கூட, பின்னெரு சமயத்தில் "நீங்கள் மஹாவீரரது (ஹனுமாரது) ஒழுக்கத்தையும் ஸ்ரீ ராமசந்திரரது கட்டளையைச் சிரமேற்கொள்ளும் பணிவையும் உங்கள் இலக்ஷியமாகக் கொள்ளுங்கள் என்று உபதேசித் திருக்கிறூர்.

ஸ்வாமி விவேகானந்தர் குறிப்பில்காணும் அவதார புருஷர் களின் வழிகளில் பற்றுக்கொண்டு, அதன்படி வாழ விருப்ப முள்ளவன் இராமாயண நூலைமட்டும் படித்தால் போதுமா? அந்த நாயகனைத் தனக்குப் பிடித்த உருவ - அமைப்பில் கண்டு மகிழ வகைசெய்து கொண்டாலல்லவோ - தன்னையும் தான் விரும்பும் துறையில் பழிற்சிவித்துக் கொள்ளமுடியும்? விக்ரக ஆராதனைமுறை நாட்டு வழக்கில் புகாமலிருந்தால் மால வனுக்கும் - வேலவனுக்கும்முரிய வித்தியாசங்களை யாரறிவர்

என்பது சிந்தனைக்குரியதாகும். கடவுள் அம்சங்களாகப் பாவிக்கப்படும் அவதார புருஷர்களுக்குரிய கல்யாண குணங்களிலும் அவரவர்களுக்குரிய சம்பிரதாய சடங்கு முறைகளிலும் காணப்படும் வேற்றுமைகளைப் பகுத்தறிய உருவ வழிபாட்டு முறைகள் பெரிதும் உதவு கின்றன. வடகலையும் - தென்கலையும் வைணவர்களிடையேக் காணப் படும் உட்பிரிவுகள். ஒருவருக்கு வேங்கடமலையான் குலதெய்வம். மற்றவருக்குத் திருவரங்கத்தான் பூஜைக் குரியவர். பொதுப்படையாகக் கணித்தோமானால் வேங்கட வனும் - அரங்கமாநகருளானும் ஒருவரே என்ற விடை வருவது உண்மையே. ஆயினும், இவ்விரு கடவுளர்க்குரிய பூஜா காலங்களும் - ஆராதனைத் துதி வகைகளும் மாறுபட்டு நிற்கக் காரணம்? அந்தக் கடவுளர்களின் உருவ அமைப்பினு லல்லவோ!

(தொடரும்).

---

<u>மதிப்புரை:</u>

## "அழகர் கிள்ளை விடு தூது"
### (உரையுடன்)

[ஆசிரியர்: பல பட்டடைச் சொக்கநாத பிள்ளை; உரை யாசிரியர்: வித்துவான், திரு. தா ம. வெள்ளைவாரணம் தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள் வெளியீடு: ஜெனரல் புக் கம்பெனி, குடந்தை. விலை ரூ. 1]

சிறந்த இலக்கிய வகையைச்சேர்ந்த இத்திருமாலிருஞ் சோலை அழகர் கிள்ளைவிடு தூதினுக்குக் கல்லூரியிற் பாடங் கற்பித்த அநுபவம் உடைய திரு. வெள்ளைவாரணம் அவர்கள் உரை வகுத் துள்ளார். சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு முதற்கண் பொழிப்பும் அடுத்து விளக்கமும் கண்டுள்ளார். ஆங்காங்கு இலக் கணக் குறிப்பு - அணிவகைகளையும் காட்டியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் முதனிலைத் தேர்வு மாணவர்களுக்கு உள்ள பாட நூலாதலின் எளிய நடையில் அழகுற இயங்குகிறது உரை. பொதுவாகத் தமிழன்பர்க்கும் குறிப்பாக மாணவர்க்கும் நன்கு பயன்படும் இவ்வுரைநூல். வேண்டுவோர் வெளியீட்டகத் திற்கு எழுதிப் பெறலாம்.

வித்துவான், சோ. சிங்காரவேலனார், B. A.,

# செய்திகள்

## ஆடிப்பூர மகோற்சவம்

**சீகாழியில்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சார்வரி ஆண்டு ஆடித்திங்கள் 3ஆம் நாள் முதல் 12ஆம் நாள் (18-7-60 to 27-7-60) முடிய ஸ்ரீ திருநிலைநாயகி அம்பிகைக்கு ஆடிப்பூர மகோற்சவம் மிக்க சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் மாலை 6 மணிக்குச் சொற்பொழிவுகள் நாள்தோறும் தொடங்கி நடைபெற்றன.

19-7-60 செவ்வாய்க்கிழமை ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்வான், திரு. சோ. சிங்காரவேலனுர் B.A. சேரமான்பெருமாள் என்னும் பொருள்பற்றியும், 20-7-60 புதன் கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்வான் திரு. ம. சிவசம்பு மங்கையர்க்கரசியார் என்னும் பொருள்பற்றியும், 21-7-60 வியாழக்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்வான், சிரோமணி, திரு. வி. சபேசன் காரைக்காலம்மையார் என்னும் பொருள்பற்றியும், 22-7-60 வெள்ளிக்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பிரின்ஸிபால், முதுபெரும் புலவர், வித்வான், திரு. முத்து. சு. மாணிக்கவாசகனுர் திருநீலகண்டர் என்னும் பொருள்பற்றியும், 24-7-60 ஞாயிற்றுக்கிழமை திருவிடைமருதூர் வித்வான், திரு. மூ. நடராஜ தேசிகர் கணநாதர் என்னும் பொருள்பற்றியும், ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்வான், திரு. வி.சா. குருசாமி தேசிகர் திலகவதியார் என்னும் பொருள்பற்றியும் சொற்பெருக்காற்றினர்கள்.

**வேளூரில்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் சார்வரி ஆண்டு ஆடித்திங்கள் 3 ஆம் நாள் முதல்

12ஆம் நாள் (18-7-60 to 27-7-60) முடிய ஸ்ரீ வாலாம்பிகை அம்பாளுக்கு ஆடிப்பூர மகோற்சவம் சிறப்புற நிகழ்ந்தது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

18—7—60 திங்கட்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பிரின்ஸிபால், முதுபெரும்புலவர், வித்வான், திரு. முத்து. சு. மாணிக்கவாசகனார் கண்ணப்பர் என்ற தலைப்பிலும், 19-7-60 செவ்வாய்க்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் எறிபத்தர் என்ற தலைப்பிலும், 20-7-60 புதன்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்வான், திரு. சோ. சிங்காரவேலனார் B. A. திருமூலர் என்ற தலைப்பிலும், 22-7-60 வெள்ளிக்கிழமை ஆதீனப் பல்கலைக்கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர் வித்வான், சிரோமணி, திரு. வி. சபேசன் அப்பூதியார் என்ற தலைப்பிலும், 24-7-60 ஞாயிற்றுக்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான், திரு. ம. சிவசம்பு மெய்ப்பொருள் என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினார்கள்.

ஆடித்திங்களில் வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ தையல்நாயகி அம்பாளுக்கு இரவில் விசேஷ அபிஷேகங்களும் சந்தனக்காப்பு அலங்காரமும் நாற்பத்தெட்டு முக்கோண யந்திரஸ்தாபன தாடங்கம் சார்த்தி நவசக்தி அர்ச்சனையும் நடைபெற்றன.

**திருக்கடவூரில்**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சார்வரி ஆண்டு ஆடித்திங்கள் 3ஆம் நாள் முதல் 12ஆம் நாள் (18—7—60 to 27—7—60) முடிய ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு ஆடிப்பூர மகோற்சவம் மிக்க சிறப்புற நிகழ்ந்தது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிகள் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

19-7-60 செவ்வாய்க்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. ம. சிவசம்பு குங்கிலியக்கலய

நாயனுர் என்ற தலைப்பிலும், 20-7-60 புதன்கிழமை ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் காரி நாயனுர் என்ற தலைப்பிலும், 21-7-60 வியாழக்கிழமை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பிரின்ஸிபால் வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசகனுர் அபிராமி அம்மை என்ற தலைப்பிலும், 22-7-60 வெள்ளிக்கிழமை ஆதீன பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், வித்வான், திரு. சோ. சிங்கார வேலனுர் B. A., அறம்வளர்த்த நாயகி என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினுர்கள்.

## ஸ்ரீ அபிராமியம்பாளுக்குப் புஷ்பாஞ்சலி

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீஅமிர்த கடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமியம்பாளுக்கு 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளால் 5—8—60 அன்று ஆடி வெள்ளிக்கிழமையைக் குறித்துப் புஷ்பாஞ்சலி இரவு 7 மணிமுதல் தொடங்கி நிகழ்ந்தது. அம்பாள் திருவுருவத்தின் கழுத்தளவுவரை பலநிறப் பூக்களால் அஞ்சலி செய்யப்பெற்றது. மாலை 6 மணிமுதல் அபிராமி அந்தாதிபாரா யணம் நடைபெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசுவரருக்கும், ஸ்ரீ கால சம்ஹாரமூர்த்திக்கும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆலயத் திற்கு எழுந்தருளி வழிபட்டார்கள். புஷ்பாஞ்சலி குறித்து விளம்பரங்கள் செய்யப்பெற்றிருந்தன. மாயூரம் முதலிய நகரங் களிலிருந்தும் மற்றும் பல ஊர்களிலிருந்தும் பிரமுகர்களும் அன்பர்களும் வந்து வழிபட்டனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கி யருளினுர்கள்.

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகம்

தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகத் (மாயூரம்) தின் வழிபாடு மாதந்தோறும் வரும் ஞாயிற்றுக்கிழமை களில் முறையாக நடைபெறுகிறது. இம்மாதம் 10—7—60

அன்று கழுக்காணிமுட்டம் ஸ்ரீ கருணைபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும், 17—7—60 அன்று திருநீடூர் ஸ்ரீ அருட்சோமநாத சுவாமி திருக்கோயிலிலும், 24—7—60 அன்று திருமூவலூர் ஸ்ரீ மார்க்கசகாயேசுவரசுவாமி திருக்கோயிலிலும், 31—7—60 அன்று திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்திலும், 7—8—60 அன்று தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த புத்தூர் ஸ்ரீ வன்மீகநாதசுவாமி திருக்கோயிலிலுமாக வழிபாடு ஒவ்வொரு வாரமும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வத் தேவஸ்தான அலுவலர்கள் வார வழிபாட்டுக் கழகத்தினரை வரவேற்று உபசரித்து வழிபாடு சிறப்புற நிகழ உதவி புரிந்தனர். புத்தூர் வழிபாட்டின்போது காட்டுமன்னார்கோயில் நாட்டுச் சின்னப்பண்ணை திரு. எம். இராமலிங்கம் பிள்ளையவர்கள் பூரணகும்ப மரியாதைகளோடு வரவேற்றுச் சிறப்புமிக்க வழிபாடுகள் செய்வித்து வரவேற்புரை ஒன்றும் வாசித்தளித்தார்கள். வரவேற்புரையுடன் கழகத்தின் ஆதிவார வழிபாட்டு நாட்குறிப்பும் இணைத்திருந்தது பாராட்டற்குரியது.

### சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

சென்னை, தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 30—7—'60 ஞாயிற்றுக் கிழமை மாலை சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்கள் " சுந்தரர் செந்தமிழ் " என்பது பற்றியும், குடந்தை திரு. L. T. பாலு அவர்கள் " சுந்தரர் வாழ்க்கை " என்பது பற்றியும் பேசினார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிறப்பு வழிபாட்டுடன் விழா தொடங்கியது. நிலையத் திருமுறை வகுப்பின் பழைய மாணவர்களான தேவார இசைமணி, திரு. வே. இலக்குமணனும், தேவார இசைமணி, செல்வி. L. இந்திராவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த அற்புதத் தேவாரப் பாசுரங்களை இசையுடன் ஓதினார்கள். சுவாமிகள் அவர்கள் தமது தலைமையுரையில், தமிழ்நாட்டின் வரலாற்றையும், பண்பாடு, கலாசாரம் முதலிய வற்றையும் தெளிவாக எடுத்துக் கூறுவது பெரியபுராணம். அப்பெரியபுராணத்துக்கு மூல நூலாக உள்ள திருத்தொண்ட த்தொகையை அருளிச் செய்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவார்கள். எனவே தமிழக வரலாறு, கலை, பண்பாடு முதலிய வற்றைப் போற்றும் மக்கள் சுந்தரரைப் போற்றக் கடமைப் பட்டுள்ளார்கள். நமக்கு முன்னுள்ள பெரியோர்களையும், ஆசாரியப் பெருமக்களைப் பின்பற்றியும் போற்றியும் வாழ வேண்டும் என்பதை சுந்தரர் தமது வாழ்வில் திருஞானசம்பந் தரையும், திருநாவுக்கரசரையும் பெருமதிப்போடு போற்றி வழி படும் முறையில் நடந்துகாட்டியுள்ளார், சமயாசாரியர்களையும், சந்தானசாரியர்களையும் போற்றி வழிபடுவதால் நமது சமூகம் உயர்ந்து நாடு உயர வழிசெய்ய முடியும் என்று கூறினார்கள்.

திரு. ச. சிவகுமாரன் அவர்கள் பேசும்போது ''சுந்தரர் கயிலைக்கு வெள்ளை யானை மீதேறி கயிலைக்குப் புறப்பட்ட தல மாகிய திருவஞ்சைக்களம் கேரளப்பகுதியில் இருக்கிறது. அங்கு அர்ச்சகர்களாக உள்ள நம்பூதிரிகள் மிகுந்த ஆசாரத்துடன் பூசனை புரிகிறார்கள். பக்தி இல்லாதவருக்கும் பக்தி உண்டாகு மாறு வழிபாடு நடைபெறுகிறது. தமிழகக் கோயில்களிலும் அவ்வாறு ஆசாரமும், வழிபாட்டு முறையும் அமைதல் வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள். திரு. வே. இலக்குமணன் கடவுள் வாழ்த்துப் பாடினார். சுந்தரர் வரலாறு அடங்கிய துண்டுப் பிரசுரம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

### ஆதீனச் சார்பில்

## அம்மையார் திருமுறை விரிவுரை விழா

தருமையாதீனச் சார்பில், காரைக்கால் ஸ்ரீ காரைக்காலம்மை யார் திருக்கோயிலில், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், முதுபெரும்புலவர் திரு. முத்து. சு. மாணிக்க வாசகனார் அவர்களாலும், திரு. சோ. சிங்காரவேலனாராலும் சுமார் இரண்டு மாதங்களாக நடைபெற்றுவந்த அம்மையார் திருமுறை விரிவுரை விழா இந்த மாங்கனித் திருவிழாவோடு நிறைவு

பேற்றது. புதுவை அமைச்சர் திரு. சோமுப்பிள்ளை அவர்கள் பாராட்டுரை வழங்கத் திருநள்ளாறு கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமை யமர்ந்து சிறப்பித்தார்கள். புதுவை ராஜ்ய டிரஷரர் திரு. பழனி ராஜா அவர்களும், புதுவை மண்டல காங்கிரஸ் தலைவர் திரு. நாராயணசாமி பிள்ளை அவர்களும் இந்நிகழ்ச்சி நிகழ்த்தப் பேருந்துணையாயிருந்து முற்றுவித்தது பாராட்டத்தக்கது. வாரந்தோறும் திரளாக அன்பர்கள் கூடி விரிவுரைகளைக் கேட்டுப் பயன்பேற்றனர்.

## மணிவிழா

தருமை யாதீனத்திற்குச் சோந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில், தருமையாதீனச் சார்பில் பழநி சிவத்திரு. ஈசானசிவாசாரியார் அவர்களுக்கு நிகழ்ந்த மணிவிழா :

சைவ சித்தாந்தச் சேந்நேறி உலகின் பேருநேறியாக விளங்குகிறது. இதன்கண் அமைந்த மேய்ப்போருள் நூல்களை மேலை நாடுகளும் வியந்து போற்றுகின்றன இந்த மேய்ப் போருள் நூல்களை - சாத்திரக் கருவூலங்களை நன்கு கற்றுத் துறைபோய முதுபேருந் திலகமாக விளங்கிவருபவர்கள் சைவசித்தாந்த சரபமும், இவ்வாதீனப் புலவரும் ஆகிய சிவத்திரு. ஈசானசிவாசாரியார் அவர்கள். சிவாசாரியார் அவர் களுக்கு மணிவிழா திருக்கடவூரில் ஆதீனச் சார்பில் மிக்க சிறப்புடன் 10—7—60 சனிக்கிழமையன்று நடைபேற்றது. திருக்கடவூரில் தருமையாதீனத்திற்குச் சோந்தமான ஸ்ரீ அமிர்த கடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் மணிவிழாக் கோள்ளுவ தேன்பது நல்வினைப்பேருக வாய்ப்பதாகும். சிவாசாரியாரவர்கள் சைவசித்தாந்தத்திற்கே தம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். நேபாளம் சேன்று சிவாகம ஆராய்ச்சி புரிந்த பேற்றி உடையவர் கள். ஆங்காங்குத் தமிழக முழுவதும் சேன்று சிவதீக்கை புரிந்து சிவநேறி வளர்த்துவரும் சீர்மை உடைய இச் சான்ரோர் மணிவிழா, சமய பரிபாலனம் புரிந்துவரும் ஆதீனச் சார்பில் நிகழ்வதே மிகப்போருத்தம் என்று திருவுளம் கோண்ட கயிலைக் குருமணியவர்களின் அருளாணைப்படி மணிவிழாச் சடங்குகள்

மாண்புற நிகழ்ந்தன. ஆதீன சிவாகம வித்துவான், சிவத்திரு. சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களும் தருமை ஆதீனம் திரு. ஜெயபால நயினர் அவர்களும் உடனிருந்துநடத்திவைத்தார்கள்.

காலை 10மணிக்குத் தேவஸ்தான பிரசாரசபா மண்டபத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருளாசியைப் பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசகனுர் அவர்கள் வாசித்தளித்தார்கள். ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் ஒரு வாழ்த்துப் பாமாலையை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனுர் B. A., அவர்கள் வாசித்தளித்தார்கள்.

ஆதீன சிவாகம பாடசாலை மாணவர்கள் சார்பில் ஒரு வாழ்த்துரை அளிக்கப்பெற்றது. பல வாழ்த்திதழ்கள் படிக்கப் பெற்றன. தேவகோட்டை முதலிய நகரத்தார் தங்கள் குரு காணிக்கையாக ரு. 801 வைத்து வழிபட்டார்கள். திரு. கிருபானந்தவாரியாரவர்கள், திரு. கே. எம். பாலசுப்ரமணியம் அவர்கள், திரு. ராய. சொக்கலிங்கம் அவர்கள் முதலிய பல அன்பர்கள் வாழ்த்துரை நவின்றனர்.

மணிவிழா அபிஷேகத்தின்போழ்து, முதலில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்களின் அருட்கொடையாகிய திருமாங்கல்ய மும், பட்டு உடைகளும் சிவாசாரியாரவர்களுக்கு வழங்கப் பெற்றன.

தேவஸ்தானக் கட்டளை மடத்தில் அறுசுவை உணவு மிக்க சிறப்போடு வந்திருந்த நூற்றுக்கணக்கான அன்பர்களுக் கெல்லாம் வழங்கப்பெற்றது.

மணிவிழாக்கொண்ட சிவாசாரியாரவர்கள் தருமையாதீனம் வந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களைத் தரிசித்தபோது, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தருளினூர்கள்.

---

நமச்சிவாய வாழ்க ! நாதன்தாள் வாழ்க !

உ

குருபாதம்

சிதம்பரம் தாலுக்கா தே. புத்தூர் ஸ்ரீ கமலாம்பிகை உடனுறை ஸ்ரீ வன்மீகநாதர் கோயிலில்

தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினர் 7—8—60 ஞாயிறன்று

வார வழிபாடாற்றியபோது அன்புடன் வாசித்தளித்த

# நல்வரவேற்பு இதழ்

சிவமணங்கமழும் செல்வர்களே !

வருக ! வருக ! தங்கள் மேலான வருகையால் மகிழ்கின்றேன். இராமேச்சுரத்தலம் வரையில் வார வழிபாடு செய்து இருபத்தோன்பதாம் வார வழிபாட்டுக்கு, என் அழைப்பிற்கிணங்கி, இச்சிற்றூருக்கும் வந்துள்ள தங்களை மனமார வரவேற்கின்றேன்.

குருபாதம் மறவாத திருவருட் செல்வர்களே !

குலம், குணம், அனுபவம், கல்வியறிவு முதலியவற்றில் சிறந்துள்ள மேய்யன்பரான தலைவரையும், பல தலங்கள் சேன்றவரும், குருபக்தி, தேய்வபக்தி மிக்கவரும், தலைவருக்கு உற்ற துணையாளரும் ஆகிய உபதலைவரையும், அன்பர்கள் மனங்கோள்ளுமாறு சோல்லும் திறமைமிக்க சேயலாளரையும், வரவுக்கு வழிசெய்து வரவுக்கு ஏற்ற சேலவைத் திறமையாய்ப் புரியும் போருளாளரையும், ''சிவநேசச் சேல்வர்'' ''சிவார்ச்சனைச் சேல்வர்'' என்று பட்டம்பேற்ற அன்பர்களையும் கயிலை மலையானைத் தரிசித்துவந்த புண்ணியர்களையும், பலவற்றிலும் சிறந்த தக்க உறுப்பினர்களையும் கோண்டுள்ள இக்கழகம் ஸ்ரீ வன்மீகநாதர் திருவருளால் மேன்மேலும் வளர்ச்சிபேற வேண்டுகிறேன்.

சேல்வன் கழல் ஏத்தும் சேல்வர்களே!

இத்திருக்கூட்டம் நன்ருய் வழிபாட்டின் மூலம் சிறப் படைய அமைத்து உதவிவரும், திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பெரு மையையும், கருணையையும் என் போன்றவர்கள் எவ்வாறு அளவிட்டுக் கூற முடியும்!

திருநேறிய தமிழ்வல்ல திறமுடையீர்!

உலகியல் அறிவும், சாத்திர அறிவும், தெய்வத்தன்மையும் ஒருங்கே அமைந்த தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர் களின் திருவுளப்பாங்கின் வண்ணம் இவ்வழிபாட்டுக்கூட்டம் செயலாற்றி, நந்தமிழ்நாட்டின் இத்தகைய கழகங்களுக்கெல் லாம் நடுநாயகமாய்த் திகழும் என்பது உறுதி. இத்தகைய வார வழிபாட்டுத் திருக்கூட்டத்தை நன்முறையில் தோற்று வித்து, சைவமும், தமிழும் தம் இரு கண்களெனப் போற்றி வரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடி களுக்குப் பலகோடி வணக்கம்.

அடியேன் வேண்டுகோளைப் பொருட்படுத்தி, இவ்வூர் எழுந்தருளி வார வழிபாடு நடத்திய கழகத்தாருக்கு, எல்லா நலனும் எய்த, கமலாம்பிகையுடனுறை வன்மீகநாதர் திருவருள் புரிய மனமொழி மெய்களால் வாழ்த்துகின்றேன்.

வணக்கம்.

இங்ஙனம்,

தென். புத்தூர்,
7—8—1960.

மு. இராமலிங்கம்,
நாட்டுச் சின்னப்பண்ணை,
காட்டுமன்னார்கோயில்.

---

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்லப்ப முதலியார், பாடியது.

மேதத்தைச் செய்பவர் வேதத்தைத் தேர்ந்தவர் மிக்ககுண
பேதத்தைச் செய்பவர் போதத்திற் றீர்ந்தவர் பேருலகி
லேதத்தைச் செய்பவர் நீதத்திற் றீர்ந்தவ ரின்னுயிர்க்குச்
சேதத்தைச் செய்பவர் கைம்பெண்ணைச் சேர்ந்தவர் சேயிழையே.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

( சார்வரிஸு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய )
( 16—8—60 முதல் 15—9—60 முடிய )

## 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் மிஸ்ரமாய் நடக்கும். அடிக்கடி அலைச்சல்களும், அதிக உழைப்பும் ஏற்படச் செய்யும். பரணி நான்கு பாதங்களும் சுபமாய் நடக்கும். எதிர்பாராத அநேக நன்மைகளும், இல்லற சுகமும் ஏற்படச் செய்யும். கார்த்திகை முதல் பாதம் ரோகத்தையும், அதிக உழைப்பையும், சொற்ப நஷ்டங்களையும் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

## 2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 3, 4 பாதங்களும் சுபமிராது. வியாதியும், சத்ரு பயங்களும், தொழில் கவலையும், நஷ்டமும் உண்டுபண்ணும். ரோகிணி 4 பாதங்களும், மிருகசீரிஷம் 1, 2 பாதங்களும் மிஸ்ரமாய் நடக்கும், வியாதி பயம், கடன் தொல்லை, தொழில் மூலம் அதிக உழைப்பு, குடும்பத் தொல்லைகள் ஏற்படச் செய்யும். ஆனாலும் கொஞ்சம் தெய்வபலம் உண்டாகி மனநிம்மதி அடையும். புதன், வெள்ளி சுபமாகும்.

## 3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

திருவாதிரை 4 பாதங்களும் என்றும் கண்டிராத சந்தோஷத்தைத் தரும். அது நிரந்தரம் இல்லாமல் இருக்கும். ஆரோக்கியமுண்டாகும். புனர்பூசம் 3 பாதங்களும், மிருகசீரிஷம் 3, 4 பாதங்களும் ஜெயத்தையும், நஷ்டமான பொருள் வரத்தையும் ஸ்திரீகள் மூலமாய் நன்மைகளையும், வித்யா விர்த்தி, கீர்த்தி பத்திரம் முதலிய சந்தோஷகரமான காரியங்களையும் உண்டாக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

கடகம் 9 பாதங்களும் மகோன்னதமான பதவிகளையும் விவாஹாதி, சுபசோபன, மங்களங்களையும், ஜெயத்தையும், சந்தோஷத்தையும் தரும் நினைத்ததெல்லாம் கைகூடும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதங்களும் உத்தியோக லாபத்தையும், ஸ்திர வாசத்தையும், மேலோர், பெரியோர் அன்பையும் தரும். தொல்லைகள் நீங்கும். பூரம் 4 பாதங்களும், உத்திரம் முதல் பாதமும் சுபமாய் நடக்கும். புத்திராதிகளால் கீர்த்தியும், சந்தோஷமும் உண்டுபண்ணும். ராஜாங்க அனுகூலமும், தெய்வ பலமும் பிரகாசிக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்,

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்களும் சுபமாகவும், சந்தோஷ கரமாகவும், லாபகரமாகவும் நடக்கச் செய்யும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் ஆரோக்கியத்தையும், உலகப் பிரசித்தி யையும் தந்து, எதிர்பாராத பெரிய சாஸ்வதமான காரியங் களை நடத்திவைத்து, மனதுக்குச் சந்தோஷத்தைத் தரும், தெய்வீக சக்தியால் அசாத்தியமெல்லாம், சுலபமாகத் தோன்றி புதிது, புதிதான காரியங்கள் நடத்திக்கொடுக்கும். குடும்ப சுகமும், கீழ்வாரிசுகளால் நன்மையும் தரும். சித்திரை 1, 2 பாதம் துன்பம் நீங்கிச் சுபமுண்டாக்கும். குடும்பம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. அதிக செலவினங்கள் ஏற்படச்செய்யும். சதாகவலையாகவே இருக்கும். சுவாதி 4 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். கடன் தொல்லைகள் நீங்கும். மேலோர், பெரியோர் அன்புகிட்டும், நினைத்தது எல்லாம் கைகூடும், தெய்வபலம் ஓங்கும். விசாகம் 1, 2, 3

பாதங்கள் மாத முற்பாதியில் சுபமாகவும், பிற்பாதியில் அசுபமாகவும் காட்டும். வரவுக்கு மிஞ்சின செலவும், தொழில் கவலையும் உண்டாகும். புதன், சனி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் ஏற்றத்தைத் தரும். குடும்பம் ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துகள், கிரய விக்ரயங்கள் ஏற்படச் செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூல நக்ஷத்திரம் 4 பாதங்களும், பூராடம் முதல் பாதமும் சுபமாகவே நடக்கும். துன்பங்கள் விலகும் உத்தியோக உயர்வு ஏற்படும். ஸ்திரவாசமும், தேவதா, குருபக்தியும் உண்டாகும். பூராடம் 2 3 4 பாதங்களும் உத்திராடம் முதல் பாதமும் ஆரோக்கியத்தைத் தந்து, கிரயவிக்ரயங்களால் லாபமுண்டாக்கும். தொழில் ஓங்கும். சுபாதிகள் ஏற்படச் செய்யும். புதன், வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மகத்தான கீர்த்தியையும் வெற்றியையும் தரும். உயர் பதவிகளையும் விசேஷ லாபங்களையும் தந்து, கீர்த்தி பத்திரமும் கிடைக்கச் செய்யும். மனம் சாந்தி அடையும். காரியங்களில் ஊக்கமும், மேதையும் உண்டு பண்ணும். புதன், சனி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் மகாவைபவத்தையும் புத்ரோத்சவாதி சந்தோஷங்களையும், ஆரோக்கியத்தையும் தரும். சதயம் 4 பாதங்களும், பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் இல்லற சுகத்தையும், ஸ்திரஜீவனத்தையும், தொழில் மூலம் அதிக லாபத்தையும், தெய்வ அனுகூலத்தையும் தந்து நினைத்ததெல்லாம் கைகூடச் செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4 பாதம் சுபமிராது. அதிக கவலேயைத் தரும். மனம் நிம்மதி இராது. உத்திரட்டாதி 4 பாதங்களும், ரேவதி 4 பாதங்களும் ஸ்திரஜீவனத்தையும் கிரயவிக்ரயங்களேயும், உத்யோக லாபத்தையும் மேலோர் பெரியோர் அன்பையும் அசாத்தியமெல்லாம், சுலபமாகச் சாதிக்கக்கூடிய சக்தியையும் தரும். குடும்ப சுகத்தையும் சந்தோஷத்தையும் தரும். புதன், வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு.- மேற்படி ஆவணி மாதம் உலகில் அமைதியை உண்டுபண்ணும். மத்தியில் இயற்கைக் கோளாறுகளால் பயிர்களுக்குத் தோஷம் காட்டும். உலக மக்களின் தர்மமூலமேதான் சுபிக்ஷம் ஏற்படச்செய்யும். கலிதோஷத்தால் பிராசீன தர்மங்களுக்கு மாறுதலே உண்டாக்கினுலும் சாதுக்கள், பெரியோர்கள் அடியார்கள் இவர்களின் சக்தியால் எதிர் நோக்கி நிற்கும் ஆபத்துக்கள் நீங்கி உலகம் சுபிக்ஷம் அடையும். கடவுள் காப்பாராக

---


**ஞானசம்பந்தம்** ஆண்டுக் கட்டணம் ரூ. 1 — 50

**[ சந்தாதாரர்களுக்கு ]**

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்களின் முகவரியையும் தெளிவாக மணியார்டர் கூப்பனில் எழுதவேண்டும். பழைய சந்தாதாரர் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்த என்று குறித்தல் வேண்டும்.

ஏதேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் பில்லே அனுப்புதல் வேண்டும்,

முகவரி :— செயலாளர், " ஞானசம்பந்தம் " காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.



உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப்பெருங்கருணையினாலே, காணாதஅருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாகி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன், ஆகியோர்களால் பூசிக்கப் பெற்றதும் காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குருபீட ஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற **ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு** நிகழும் சுபகிருது ஆண்டு வைகாசித்திங்கள் 3-வது நாள் (16—5—62) புதன்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

திருநாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமபுர ஆதீனம்
கார்பார்,

தருமை ஆதீன மடாலயம்,
சுபகிருது - சித்திரை 26.

சொக்கநாதத் தம்பிரான்.

---

ஆதீன மடாலயத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-மணிமுதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும் காலை 10 மணிமுதல் சைவசித்தாந்த வகுப்பும் நடைபெறும்.

# திருநாள் விபரம்.

வைகாசி ௴

| தமிழ் ௵மீ௳ | இங்கிலீஷ் ௳ மீ ௵ | வாரம் | திரு நாள் | உற்சவ விபரம் |
|---|---|---|---|---|
| 2 | 15—5—62 | மங்களவாரம் | | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 30-36 நாழிகைக்கு மேல் 35-51 நாழிகைக்குள் விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை, விக்நேசுவர பூஜை, வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| 3 | 16—5—62 | புதவாரம் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 4-30 நாழிகைக்குமேல் 9-45 நாழிகைக்குள் மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு மஹோத்ஸவ துவஜாரோஹணம். |
| 4 | 17—5—62 | குருவாரம் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 5 | 18—5—62 | சுக்கிரவாரம் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி. |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 19—5—62 | ஸ்திரவாரம் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி. |
| 7 | 20—5—62 | பானுவாரம் | 5 | சகோபுர ரிஷப வாகனக் காட்சி. |
| 8 | 21—5—62 | சோமவாரம் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக் காட்சி. |
| 9 | 22—5—62 | மங்களவாரம் | 7 | திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமானம். வெள்ளி ரதக்காட்சி. |
| 10 | 23—5—62 | புதவாரம் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| 11 | 24—5—62 | குருவாரம் | 9 | காலை மணி 7-30க்கு மேல் 9-30க்குள் மிதுன லக்னத்தில் மகா ரதாரோஹணம். திருத்தேர். |
| 12 | 25—5—62 | சுக்கிரவாரம் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாருடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங்கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம். |
| 13 | 26—5—62 | ஸ்திரவாரம் | | மௌன உற்சவம். |
| 14 | 27—5—62 | பானுவாரம் | | சண்டேசுரர் உற்சவம். |

உ

குருபாதம்

# சைவசித்தாந்தப் பாடவகுப்பு

சிவஞானசித்தியார்

16—5—62 முதல் 26—5—62 முடிய

காலை 10 மணி முதல் 12 மணி வரை

தருமையாதீனப்புலவர், வித்துவான்,

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்,

(தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி, காஞ்சிபுரம்.)

சிவஞானபோதம்

21, 22, 23—5—62 மூன்றுநாட்கள்

சைவசித்தாந்தசரபம்,

சிவஸ்ரீ. ஈசானசிவாசாரியார்,

பழநி.

# திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

ஒவ்வொருநாளும் மாலை 6மணி முதல் நடைபெறும்

முதல் திருநாள் 16—5—62 புதன்கிழமை

## திருஞானசம்பந்தர் திருநாள்

வித்துவான்,

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,

தருமையாதீன சமயப்பிரசார நிலையம். சென்னை.

புலவர்,
திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.
தமிழ்விரிவுரையாளர், கிறித்தவர் கல்லூரி, தாம்பரம்
சென்னை.

"இயற்கை வருணனை"

கதா காலக்ஷேபம்

தருமையாதீனத் தேவாரப் பாடசாலைத் தலைமையாசிரியர்,
திரு. ஆர். வேலாயுத ஓதுவார்
"மணிவாசகர்"

இரண்டாந் திருநாள் 17—5—62 வியாழக்கிழமை

## திருநாவுக்கரசர் திருநாள்

தருமையாதீனப் புலவர், பண்டித வித்துவான்,
திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சியாளர், திருவையாறு.

"உவமைநலம்"

வித்துவான்,
ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானம்,
வைத்தீஸ்வரன்கோயில்.

"சித்தாந்தம்"

மூன்றாந் திருநாள் 18—5—62 வெள்ளிக்கிழமை

## சுந்தரர் திருநாள்

வித்துவான்,
ஸ்ரீமத். சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள்,
கட்டளை விசாரணை, ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரசுவாமி
தேவஸ்தானம், திருநள்ளாறு.

"சித்தாந்தம்"

தருமையாதீனப் புலவர், வயிநாகரம், பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார்,
தேவகோட்டை.

" இலக்கியநயம் "

இன்னிசை
இசைவாணர்,
திருமருகல், திரு. V. சோமசுந்தரம் குழுவினர்

நான்காம் திருநாள் 19—5—62 சனிக்கிழமை

மணிவாசகர் திருநாள்

வித்துவான்,
ஸ்ரீமத். மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருக்கடவூர்.

" உவமைநலம் "

திருமுறைக்கலைஞர், வித்துவான்,
திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்,
தமிழாசிரியர், பொன்னையா உயர்பள்ளி, திருச்சி.

" சித்தாந்தம் "

இன்னிசை
மதுரை, ரஞ்சிதகான, இசைமணி
திரு. S. சோமசுந்தரம் குழுவினர்.

ஐந்தாம் திருநாள் 20—5—62 ஞாயிற்றுக்கிழமை

மெய்கண்டார் திருநாள்

தருமையாதீனப் புலவர்
வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி, காஞ்சிபுரம்.

" சித்தாந்தம் "

செஞ்சொல்மாமணி
திரு. ச. சிவகுமாரன் M. A.,
பின்னி கம்பெனி, சென்னை.

" மரபு "

வீணை இன்னிசை
திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி வீணையாசிரியர்
சங்கீதபூஷணம்,
திரு. ஆர். சண்முகசுந்தரம்

ஆறாந்திருநாள் 21—5—62 திங்கட்கிழமை

அருணந்திதேவர் திருநாள்

சைவசித்தாந்த சரபம்
சிவஸ்ரீ. காசிவாசி ஈசானசிவாசாரியார்,
பழநி.

" சித்தாந்தம் "

செஞ்சொற்கொண்டல்,
வித்துவான். திரு. சோ. சிங்காரவேலன், B. A.,
முதல்வர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

" உவமைநலம் "

ஸ்ரீமத். சட்டைநாதத்தம்பிரான் சுவாமிகள்,
கட்டளை விசாரணை, குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி
தேவஸ்தானம், மாயூரம்.

" வரலாறு "

கதாகாலக்ஷேபம்
தஞ்சை
திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தி குழுவினர்
" சிறுத்தொண்டர் "

ஏழாந் திருநாள் 22—5—62 செவ்வாய்க்கிழமை

மறைஞானசம்பந்தர் திருநாள்

திருவாசகமணி
திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் B. A., B. L.,

" சித்தாந்தச் சிறப்பு "

செந்தமிழ்ச்செல்வர், வாகீசகலாநிதி, வித்துவான்.
திரு. கி. வா. ஜகந்நாதன், M. A.,
ஆசிரியர் 'கலைமகள்' சென்னை.
" அருட்பார்வை "

ஸ்ரீமத். விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகள்,
கட்டளை விசாரணை, ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்.
திருவையாறு.
" வரலாறு "

கதாகாலக்ஷேபம்

தருமையாதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர, சங்கீத சாகித்ய வல்லப, கதா ரசாஸ்வாதக, பாகவதர், எம்பார்
ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினர்
" காரைக்காலம்மையார் "

எட்டாந் திருநாள் 23—5—62 புதன்கிழமை

உமாபதிதேவர் திருநாள்

செந்தமிழ்ச் செம்மல்
திரு அ. சீனிவாசராகவன் M. A.,
முதல்வர், வ. உ. சி. கல்லூரி. தூத்துக்குடி.
" கவிதைநயம் "

தருமையாதீனப் புலவர், சித்தாந்தசிகாமணி,
திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T.,
தலைமையாசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி, காஞ்சிபுரம்.
" சித்தாந்தம் "

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.
" வரலாறு "

கதா காலக்ஷேபம்

நாகை தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர்,
தருமையாதீனப்புலவர்
திரு. வை. மு. சண்முக தேசிகர் குழுவினர்
" விநாயகர் திருமணம் "

ஒன்பதாந்திருநாள் 24—5—62 வியாழக்கிழமை

## கமலை ஞானப்பிரகாசர் திருநாள்

பைந்தமிழ்ச்செம்மல்,
வித்துவான், திரு. கு. அருணசலக் கவுண்டர்
தமிழ்த்துறைத் தலைவர், ம. தி. தா. இந்துக்கல்லூரி,
திருநெல்வேலி.

" வரலாறு "

வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

" சைவானுஷ்டான அகவல் "

கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான்,
திரு. வை. சுந்தரேச வாண்டையார்,
கல்வெட்டு ஆராய்ச்சி விரிவுரையாளர்,
அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

" சித்தாந்தம் "

கதா காலக்ஷேபம்

சென்னை

திருமதி குமாரி கௌரி குழுவினர்

" குருஞானசம்பந்தர் "

பத்தாம் திருநாள் 25—5—62 வெள்ளிக்கிழமை

## குருஞானசம்பந்தர் திருநாள்

ஆட்சிச் சொற்காவலர்
திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A.,
ஆட்சிமொழித் தனி அலுவலர் சென்னை அரசு.

" சிவபோகசாரம் "

திருமதி ஜெயகுமாரி பாஸ்கரன்
சென்னை.

" வரலாறு "

திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை M. A., M. L. C.
இலஞ்சி.

" குருவருள் "

## 26—5—62 சனிக்கிழமை

## சிவஞானதேசிகர் திருநாள்

சிவநெறிச்செல்வர், வித்துவான்
திரு. கே. எம். வேங்கடராமையா M. A.,
முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி திருப்பனந்தாள்.

" முத்துக்குமாரசுவாமி திருவருட்பா "

கயப்பாக்கம், திரு. சோமசுந்தரம் செட்டியார்,
சென்னை.

" சோக்கநாதவெண்பா "

திருக்குறள்வேள்,
திரு. ஜி. வரதராச பிள்ளை, B. A.,
செயலாளர், மத்திய கூட்டுறவு பாங்கி, திருச்சி.

" அன்னபூரணியம்மை திருவருட்பா ",

## இன்னிசை

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரி முதல்வர்.
தருமையாதீனப்புலவர், இசையரசு,
திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் குழுவினர்

25—5—62 வெள்ளிக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## குருபூஜை விழா

காலை 10 மணி முதல்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

விழாமலர்

# SAIVA - SIDDHANTAM

மாலை 6 மணிக்கு

கனகாபிஷேகம் கொண்டருளிய

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

காவிரித்திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக் குருமூர்த்த வழிபாடு செய்தருளல்.

26—5—62 சனிக்கிழமை

காலை 11 மணி முதல்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

பகல் 12 மணி முதல்

மாகேசுவரபூஜை

இரவு

பட்டணப்பிரவேசம்